வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.07.2022 சனிக்கிழமை | இதழ் : 235 | பக்கங்கள் : 16

# கோட்டாபயவை கைது செய்யும் கோரிக்கையை கனடா ஆதரிக்கும்!

## எதிர்கால பிரதமர் என கணிக்கப்படும் பியார் பொய்லிஎவ்ரா பகிரங்க அறிக்கை

**● யாழில் தூதரக சேவை அலுவலகம் அமைக்கவும் உறுதி**



ஒட்டாவா, ஜூலை 30

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான கோரிக்கையை ஆதரிப்பதாக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான பழமைவாதக் கட்சியின்** (Conservative Party of Canada) **தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் பியார் பொய்லிஎவ்ரா** (Pierre Poilievre) **பகிரங்க அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.**

15

## தொற்றுக்கு ஐவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 30

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் ஐவர் உயிரிழந்தனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது.

இதேசமயம், புதிதாக தொற்றாளர்கள் 143 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஐ. எம். எவ்வுடனான பேச்சு அரசாங்கத்துக்கு வெற்றி!

**ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை**

கொழும்பு, ஜூலை 30

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் நடத்திய பேச்சு வெற்றியடைந்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் நேற்றுத் தெரிவித்தது.

நாட்டில் பொருளாதார பிரச்னைகளை தணிக்கவும், நல்ல பொருளாதார நடைமுறைகளை ஏற்படுத்தவும் உதவி பெறும் நோக்கில்

15

## முன்னிலை சோசலிச கட்சியை தடை செய்வது குறித்து பேச்சு!

கொழும்பு, ஜூலை 30

மக்கள் போராட்டத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு அடக்குமுறை உத்திகளை பயன்படுத்தி வரும் நிலையில், முன்னிலை சோசலிச கட்சியை தடைச் செய்வது தொடர்பில் உயர் மட்ட பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தின் பின்னணியில் முன்னிலை சோசலிச கட்சியின் பங்களிப்பு மிகப் பெருமளவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

15

## ஒமைக்ரோன் உபபிறழ்வின் தாக்கம் நாட்டில் உயரும்!

**மருத்துவர் சந்திம எச்சரிக்கை**

கொழும்பு, ஜூலை 30

உலகைப் பேரலையாகத் தாக்கி வரும் ஒமைக்ரோனின் உபபிரிவான பிஏ 5 தொற்றின் தாக்கத்தால் நாட்டில் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளார் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர.

எனவே, பொதுமக்கள், பூஸ்டர் தடுப்பூசி பெறல், முகக்கவசம் அணிதல், அறிகுறிகள் இருந்தால்

15

## அவசரகால ஒழுங்குவிதிகளை சவாலுக்கு உட்படுத்தி வழக்கு!

**உயர்நீதிமன்றத்தில் தாக்கல்**

கொழும்பு, ஜூலை. 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பிரகடனப்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அவசரகால ஒழுங்குவிதிகளைச் சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பான வர்த்தமானியை வலுவிழக்கச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி இலங்கை மனித

15

## மைத்திரி - ரணில் மீண்டும் கூட்டு?

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நிதி அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இது சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கும் நோக்குடனான சந்திப்பு என்றும் அனைத்துக் கட்சி

15

## சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க இணையுங்கள்

**சகல எம். பிக்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு**

கொழும்பு, ஜூலை 30

அனைத்துக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும்

15

## காலிமுகத்திடல் கடலில் இளைஞன் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 30

காலிமுகத்திடல் கடற்கரையில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. இளைஞரின் இறப்புக்கான காரணம் குறித்து கோட்டை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

உயிரிழந்தவருக்கு சுமார் 20 வயது இருக்கலாம் என்றும் சடலம் கொழும்பு தேசிய மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வடக்குக்கு எரிபொருள் இறக்குமதியை நேரடியாக மேற்கொள்ள விசேட அனுமதி

**காஞ்சன விஜேயசேகர தெரிவிப்பு**

07

## இப்படியும் நடக்கிறது...!

சில மாதங்களுக்கு முன்னர் நமது பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வந்திருந்த அந்த விடயத்தை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கூட்டமைப்புக்கும் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையே நடந்த சந்திப்பில் சில விடயங்கள் உடனடி தீர்வு காண்பதற்கு இணக்கம் காணப்பட்டதாக அப்போது கூறப்பட்டது.

பலத்த காத்திருப்புக்களின் பின்னர் நடந்த அந்தச் சந்திப்பின்போது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சில பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வுகாண இணக்கம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

அதிலும் சினிமாப்பட 'கிளைமாக்ஸ்' காட்சிகள் போல, இராணுவம் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்காக அளவீடுகளைச் செய்வதை நிறுத்த வேண்டும் என்று கூட்ட மைப்பு கேட்க, அப்படியா? இராணுவம் எதற்காகக் காணி களை எடுக்கிறது? இது எனக்குத் தெரியாதே என்று ஜனா திபதி கேட்டாரெனவும், இந்தச் சந்திப்பு முடிந்து வெளியே வந்த சுமந்திரனிடம் இராணுவத் தளபதி தொலைபேசியில் தொடர்புகொண்டு, விபரம் கேட்டாரென்றும் பரபரப்பாக செய்திகள் வெளிவந்தன.

இராணுவத் தளபதிக்குக்கூட தெரியாமல் காணிகளை இராணுவத்தினர் அளவீடு செய்கிறார்கள் என்று நாமும் முணுமுணுத்துக்கொண்டோம்.

அதில் சிறப்பு என்னவென்றால், அந்தக் காலத்தில் பல இடங்களில் வடக்கில் கடற்படையினரே காணிகளை சுவீகரிப்பதற்காக காணிகளை அளக்க முயன்றதும் பின்னர் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டதாகவும் செய்திகள் வந்துகொண்டிருந்தன.

அதாவது கடற்படை காணி சுவீகரிப்புக்கு முயன்று கொண்டிருக்க நாம், இராணுவம் முயல்வதாக புகார் கூறினால் அவர்கள் இப்படித்தான் பதில் செல்லவேண்டியிருக்கும்.

இப்போது அதுவல்ல விடயம், அந்தச் சந்திப்பில், அரசியல் கைதிகளின் விடயங்கள் குறித்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அதுவிடயமாக அப்போதைய நீதி அமைச்சர் அலி சப்ரியும் சுமந்திரனும் சந்தித்து பேசி அவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பது என்றும் முடி வெடுக்கப்பட்டதாக அப்போது கூறப்பட்டது.

நமது கெட்ட காலமோ என்னவே, இந்தச் சந்திப்பு நடந்து சில வாரங்களிலேயே ராஜபக்ஷக்களுக்கு எதிராக நாடு கொந்தளித்துப் போனதும், அந்தக் கொந்தளிப்பில் நாமும் இணைந்து கொண்டதாலும் விடயங்கள் நடக்கவில்லை.

நமது கூட்டமைப்பும் இதனால் தப்பித்துக்கொண்டது.

இப்போது, ரணில் ஜனாதிபதி. அவர் பாராளுமன்றத்தில் தேர்தலைச் சந்தித்தபோது, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க முடிவெடுத்தபோதும், நமது கூட்டமைப்பு இந்த அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் தமது நிபந்தனைகளில் குறிப்பிட்டிருந்தது.

அவர் வென்றிருந்தால், இப்போது நமது கைதிகள் சிலர் விடுதலையாகியிருப்பார்களோ என்னவோ?

ஆனால், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தவர் நீதியரசர் விக்னேஸ்வரன். தேர்தல் நடப்பதற்கு முன்னதாக ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள், பல நாட்கள் கூடிப்பேசி, சில கோரிக்கைகளை இறுதி செய்திருந்தன. அந்தக் கோரிக்கைகளை வேட்பாளர்கள் அனைவரிடமும் கொடுத்து அதனை ஏற்றுக்கொள்கின்ற வரையே ஆதரிப்பது என்றும் இந்த ஆறு கட்சிகளும் தீர்மா னித்திருந்தன.

ஆனால், வேட்பாளர்கள் யாரும் அதனைக் கண்டுகொள்ளாததாலோ என்னவே அதனை அப்படியே விட்டுவிட்டு வெவ்வேறு முடிவுகளை எடுத்தனர் தலைவர்கள்.

அதிலும் விக்னேஸ்வரன் ஐயாவோ, தான் சில கோரிக்கைகளை ரணிலிடம் விடுத்தாரெனவும் அதனை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதால் அவரை ஆதரிக்க முடிவெடுத்ததாகவும் அறிவித்திருந்தது ஞாபகமிருக்கலாம்.

இப்போது ரணில் வெற்றி பெற்றபின்னர், அவர் ரணிலுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் விடுவிக்கவேண்டிய நாற்பத்தியாறு அரசியல் கைதிகளின் விபரங்களுடன் அவர்களை பொதுமன்னிப்பில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இத்தோடு தன் பணி முடிந்துவிட்டது என்று இருந்துவிடாமல், உறுதியளித்தவாறு அவர்களை விடுவிக்க விக்னேஸ்வரன் அழுத்தம்கொடுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம்.!

- ஊர்க்குருவி.

## யாழ். மாநகர சபையின் 'யாழ். விருது' திருக்கேதீஸ்வர திருப்பணி சபைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாநகர சபையால் வழங்கப்படும் 'யாழ். விருது' இந்த ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையினருக்கு வழங்கப்படவுள்ளதாக ஆணையாளர் இ. த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நல்லூர் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகார குழு நல்லைகுமரன் மலர் வெளியீட்டுடன், யாழ். விருதையும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது. இம்முறை, நல்லைக் குமரன் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஒகஸ்ட் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றியவர்களை கௌரவித்து யாழ். விருது வழங்கும் வழமைக்கு ஏற்ப இந்த வருடம், ஈழத்தின் வரலாற்று சிறப்புமிக்க சமய குரவர்களின் பாடல்பெற்ற சிவ தலமான திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகப் பணிகளை ஆற்றி ஈழத்தில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு துணை செய்து இறைபணி புரிந்த திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையினருக்கு இந்த ஆண்டு யாழ். விருதை வழங்கி கௌரவிப்பதென சைவ சமய விவகார குழுவால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது." - என்றுள்ளது. (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் நெருக்கடிகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுழிபுரம் அருள்மிகு வீபத்திரர் உடன் உறை பத்திர காளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீசி. திருஞானசம்பந்தக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

## ஓய்வுபெற்ற அதிபர் கழுத்தறுத்து கொலை!

கொழும்பு, ஜூலை 30

ஓய்வுப்பெற்ற அதிபரான அபேரத்ன என்பவர் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டாரென பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொடை - தொட்டுப்போலதென்ன பகுதியை சேர்ந்தவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். வீட்டில் பல வருடங்களாக தனிமையில் வசித்து வந்த நிலையில், நேற்று காலை தந்தைக்கு உணவு வழங்குவதற்காக மகன் ஒருவர் வீட்டுக்கு சென்றுள்ளார். அப்போது தந்தை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் விழுந்து கிடந்ததையடுத்து அவரை உடனடியாக பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துவிட்டாரென வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த அதிபரின் சடலம் பலாங்கொடை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இரத்தினபுரி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் பலாங்கொடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 30

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஒரு இலட்சம் ரூபா இருவர் கொண்ட சரீரப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபாய் காசு பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

இவர், இணையத்தளங்களில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் படங்களை பதிவு ஏற்றியமை தொடர்பான குற்றச்சாட்டில், கடந்த 2021 மே 3 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## அறிவகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு, விளையாட்டு விழாக்கள்!

வடமராட்சி, ஜூலை 30

பருத்தித்துறை - புலோலி மேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நேற்று முன்தினம் சனசமூக நிலையத்தின் தலைவர் ம. தனுஷன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

விழாவுக்கு வந்த விருந்தினர்கள் முருகன் ஆலய வீதி முகப்பிலிருந்து, மைதானம் வரை மாலை மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து, அறிவகம் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சிறப்பு பிரதம கௌரவ விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலுடன் குறித்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து இரண்டு இல்லங்களாக விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. பழைய மாணவர்கள் கிராம மக்களுக்கான கயிறிழுத்தல், சங்கீத கதிரை, நாடு கடத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் த. ஐங்கரன், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், ஓய்வு பெற்ற கிராம சேவகர் பொ. தயாசிறி, ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக புலோலி வடமேற்கு கிராம அலுவலர் வ. சிவபரன், வடமேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீசங்கர் எமிலா கொன்சிலா, பருத்தித்துறை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா, ஹாட்லி கல்லூரி அதிபர் வாணி முகுந்தன் உள் ளிட்டவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வுக்கு அந்தக் கிராமத்தின் மக்கள், அயல் கிராம மக்கள் என நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
30.07.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலுக்கு முன்னாலுள்ள சவால்கள்?

ஜனாதிபதி தெரிவின் முன்னாலிருந்த சவால்களை ரணில் விக்கிரமசிங்க சாதாரணமாக வெற்றிகொண்டிருந்தார். ஐம்பதுக்கு மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார். 45 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் அனுபவத்தை கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவால், ஒருமுறைகூட, தேர்தல் மூலம் ஜனாதிபதியாக முடியவில்லை. அவரின் கட்சியின் சார்பிலேயே அவரால் போட்டியிட முடியாத நிலைமையே இருந்தது. அந்தளவுக்கு அவர் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்திருந்தார். எனினும், நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரணமான சூழ்நிலையால், பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம், அவரின், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி கனவு ஈடேறியிருக்கின்றது. ஆனால், இப்போதுதான் ரணில் உண்மையான சவால்களை எதிர்கொள்ளப் போகின்றார்.

சர்வதேச அளவில் இன்னும் இலங்கையை ஓர் அரசியல் ஸ்திரமுள்ள நாடாக நோக்கும் நிலைமை ஏற்படவில்லை. ரணில் மேற்குலகின் அபிமானத்தைப் பெற்றவராக இருந்தாலும்கூட, அவர் பாராளுமன்றத்தில் பலமுள்ள ஒருவராக இல்லை. அவர் இப்போதும் ராஜபக்ஷக்களின் கட்சியை சார்ந்தே இருக்கின்றார். இந்த நிலையில் ஏதோவொரு வகையில் ரணிலின் ஆட்சியானது ராஜபக்ஷக்களின் நிழலில் இருப்பதான ஒரு பார்வையே ஏற்படுகின்றது. இதனை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பும் ரணிலுக்கு உண்டு.

விடயங்களை முன்கொண்டு செல்வதில் இது ஒரு தடையாகவே இருக்கப் போகின்றது. ஏனெனில், ராஜபக்ஷக்களின் நிழல் அரசாங்கத்தை ஒருபோதும் மேற்குலகு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த பின்னணியில்தான், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி வெற்றிபெற வேண்டும். அதனை வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவைகள் நடந்தால்தான், ரணிலால் விடயங்களை முன்கொண்டு செல்ல முடியும்.

இன்றைய நிலையில், வழமையான அணுகுமுறைகள் எவையும் இலங்கைக்கு கைகொடுக்கப் போவதில்லை. ஏனெனில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், வெளிநாட்டு உதவிகளின்றி, ஓர் அடி கூட எடுத்துவைக்க முடியாது. வெளிநாட்டு உதவிகளைப் பெற வேண்டுமாயின், அவர்கள் எதிர்பார்க்கும் சில விடயங்களை செய்தேயாக வேண்டும்.

ஒருபுறம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்வதில் வெற்றி பெறுகின்ற அதேவேளை, நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் வெற்றிபெற வேண்டு மாயின் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கட்டாயமானது. அதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை மிகவும் அவசியம். சர்வதேச நாணய நிதியம் ஒரு சுயாதீன நிதி நிறுவனமாக இருந்தாலும்கூட, அது அமெரிக்காவின் நேரடி செல்வாக்குக்கு உட்பட்ட நிறுவனமாகும். அமெரிக்காவின் ஆர்வங்கள் சர்வதேச நாணய நிதியத்துக்குப் பின்னாலுண்டு. ஒருவேளை ராஜபக்ஷக்களின் கைகள் திரைமறைவில் அரசாங்கத்துக்குள் செல்வாக்குச் செலுத்தக்கூடும் என்னும் சந்தேகம் ஏற்பட்டால், மேற்குலக ரணிலை நம்பிப் பயணிப்பதிலும் சிக்கல்கள் ஏற்படலாம். இந்த விடயங்களை அறியாமல் ரணிலும் செயல்படவில்லை.

இலங்கை தொடர்பில் மேற்குலகுக்கு சிக்கலான அனுபவங்கள் உள்ளன. 2015இல், இடம்பெற்ற ஆட்சி மாற்றத்திற்கு பின்னால், மேற்குலகு இருந்ததான பார்வைகள் உள்ளன. ஆனால், ஆட்சி மாற்றம் அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை. இந்த நிலையில்தான் கோட்டாபய ராஜபக்ஷ, 69 இலட்சம் வாக்குகளால் வெற்றிபெற்று, மீளவும் ராஜபக்ஷக்களின் அதிகார மையத்தை தூக்கி நிறுத்தியிருந்தார். தற்போது மீளவும் ராஜபக்ஷக்கள் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில்தான், ரணில் விக்கிரமசிங்க அதிகார அரசியலுக்குள் மீளவும் கால்பதித்திருக்கின்றார்.

ஆனால், இம்முறை விடயங்கள் தலைகீழாக இடம்பெற்றிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் கட்சியின் ஆதரவுடன், அரங்குக்குள் நுழைந்திருக்கின்றார். ஒரே நேரத்தில் ராஜபக்ஷக்களின் செல்வாக்கிலிருந்த மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் தனது செல்வாக்குக்குள் கொண்டு வர வேண்டும், நாட்டையும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். இந்த இரண்டு சவால்களையும் ஒரே நேரத்தில் கையாள்வதில்தான், ரணிலின் வெற்றி தங்கியிருக்கின்றது.

# ஜெனிவாவில் இலங்கை எதிர்நோக்கவுள்ள நெருக்கடி!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கை இந்தத் தடவை ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என்று பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் எச்சரித்துள்ளார்.



இலங்கை ஜெனிவாவில் எதிர்நோக்கவுள்ள நெருக்கடிக்கான காரணம் குறித்து கருத்து வெளியிட்டபோது காலிமுகத்திடலில் “கோட்டா கோ கம“வில் அமைதி வழி ஆர்ப் பாட்டக்காரர்களை விரட்டியடித்தமையே முக்கிய காரணமாகும் எனவும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். பேராசிரி யர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டிருப்பதை நோக்கும் போது “ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் விட்டது“ போன்றே காணப் படுகின்றது.

அத்துடன், காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டம்மீது நடத்தப்பட்ட தாக்குதலை சர்வதேச சமூகம் வன்மையாக கண்டித்திருப்பதாகவும் கூறியுள்ளதோடு அந்தத் தாக்குதல் மிலேச்சத்தனமானது எனவும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தராக இருந்த கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் காலஞ்சென்ற பேராசிரியர் நடராஜாவின் விருப்புக்குரிய முதன்மை மாணவரென்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சமகால சட்டத்துறை மாணவராகவும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் விளங்கினார்.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைமீது சர்வதேச சமூகம் கண்டனத்தை வெளியிட்டுள்ளதன் பின்னணியில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை முன்பாக காலி முகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாடக் காரர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுவிற்சர்லாந்தில் வாழ்கின்ற சிங்கள மக்களும் வன்மையாக கண்டித்துள்ளனர். அவர்கள் ஜெனிவா

மனித உரிமைகள் பேரவை முன்பாக இலங்கையின் ஆயுதப் படையினருக்கு எதிராக பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத் திலும் குதித்திருந்தனர்.

இதன்மூலம் இதுவரை காலமும் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்கள் கடந்த கால ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர்களில் இலங்கை ஆயுதப் படையினரின் அத்துமீறல்கள் குறித்து குறிப்பிட்டு வந்தவை ஜெனிவாவில் நியாயப்படுத்தப்பட் டுள்தையும் அவதானிக்க முடிகின்றது.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர். அப்போது அவர் ஜெனிவாவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசைக் காப்பாற்ற தமது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

ஆனால், அன்று ஜெனிவாவில் இலங்கை ஆயுதப் படையினர் வடக்கு - கிழக்கில் மேற்கொண்ட அத்துமீறல்கள் குறித்த குற்றச் சாட்டுகளை மறுத்து வாதிட்டிருந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், இன்று ஆயுதப்படையினர் காலிமுகத்திடலில் கோட்டா கோ கமமீது மேற்கொண்ட தாக்குதலை கண்டித் துள்ளமை “தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்குபடக்கென்றும்“ என்ற தமிழ் நாடோடிப் பழமொழியை நினைவூட்டுகின்றது.


ஓர் அதிகாலைப்பொழுதில் ஆயுதப் படையினர் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக் காரர்கள்மீது நடத்திய தாக்குதலை, அதுவும் தடியடி நடத்திய அந்தத் தாக்குதலை போரசிரியர் ஜீ. எல். பீரிஸ் மிலேச்சத்தனமானது என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், மூன்று தசாப்த காலமாக இரவு - பகல் பாராது ஆயுதப் படையினர் நிலம், நீர், ஆகாயம் என்று அனைத்து வழிகளிலும் வடக்கு - கிழக்கில் நடத்திய தாக்குதல்களை என்ன வென்றழைப்பது என்றே எண்ண வேண்டியுள்ளது.

“நுதலும் தன் வாயால் கெடும்“ என்று குறிப்பிடப்படுவதைப்போல பேராசிரியர் பீரிஸும் தன் வாயால் இலங்கையின் ஆயுதப்படைகள் காலிமுகத்திடலில் நடத்திய தாக்குதலை தவறானது என்று ஏற்றுள்ளதோடு சர்வதேச சமூகம் முன்பாக இலங்கை ஆயுதப்படையினர் குறித்து தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் நியாயப்படுத்தியுள்ளார்.

காலிமுகத்திடல் தாக்குதல் மட்டுமல்ல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைகளையும் சர்வதேச சமூகம் வன்மையாக கண்டித்துள்ளது. தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடிக்கடி மேற்கத்தேய நாடுகளின் தூதுவர்கள் சந்தித்து காலி முகத்திடல் தாக்குதல் சம்பவம் குறித்து தமது நாடுகளின் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இதன்மூலம் ஒரு குளவிக்கூட்டை சீண்டி விடுவதனால் ஏற்படுகின்ற விளைவை எதிர் கொள்வது போல காலிமுகத்திடல் ஆர்ப் பாட்டத்தில் கைவைத்ததன் மூலம் ஜெனிவாவில் இலங்கை ஆயுதப்படையினரின் முகத்திரை முழு அளவில் கிழித்தெறியப் படும் நிலை பலமடைந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூலை - 30 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 14
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : துவிதியை




**மேடம்**
பயணங்களால் அலைச்சல் உண்டாகும் என்றாலும் ஒரு முயற்சி நிறைவேறும். தேவைகள் பூர்த்தியாகும். பங்குதாரர்களுடன் உண்டான பிரச்சினைகள் முடியும்.

**இடபம்**
பயணங்களால் அலைச்சல் உண்டாகும் என்றாலும் ஒரு முயற்சி நிறைவேறும். தேவைகள் பூர்த்தியாகும். பங்குதாரர்களுடன் உண்டான பிரச்சினைகள் முடியும்.

**மிதுனம்**
பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். வருமானம் கூடும். உறவினர்கள் உங்கள் வீடு தேடி வருவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் அரசு வழியில் ஆதாயம் உண்டாகும்

**கடகம்**
உற்சாகமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். நிதிநிலை உயரும்.வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் கவனக்குறைவால் செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். ஒரு சிலரின் விமர்சனத்திற்கு ஆளாவீர்கள். உங்கள் முயற்சிகளில் எதிர்பார்த்த நன்மையை எட்ட முடியாமல் போகும்..

**கன்னி**
பண பரிவர்த்தனையில் கவனம் தேவை. வேறு சிந்தனைகள் வேண்டாம். விழிப்புடன் செயல்படுவதால் விரயங்களைத் தவிர்க்க முடியும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**துலாம்**
எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். கடன்களை அடைப்பீர்கள். பழைய முதலீடு ஒன்றிலிருந்து எதிர்பாராத லாபம் காண்பீர்கள். நன்மையான நாள்.

**விருட்சிகம்**
வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை லாபத்தை உண்டாக்கும். புதிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும். மற்றவர்களுடன் அனுசரித்துச் சென்று நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**தனுசு**
உங்கள் திறமையால் ஒரு செயலில் ஆதாயம் காண்பீர்கள். பகைவரால் ஏற்பட்ட சங்கடம் விலகும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**மகரம்**
புதிய நண்பர் ஒருவரால் உங்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள். உங்கள் மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும். வருமானம் கூடும்.

**கும்பம்**
மறைமுகத் தொல்லை கொடுத்து வந்தவர்களை கண்டறிந்து விலக்குவீர்கள். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் ஏற்பட்ட தடை விலகும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**மீனம்**
உறவினர்கள் உதவியுடன் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரத்தில் உங்கள் முயற்சி வெற்றியாகும்.

# ராஜபக்ஷக்கள் உயிரை காப்பாற்ற ஓடுவரென அன்று நான் சொன்னது இன்று நடந்துள்ளது!

## வைகோ சொல்கிறார்

இராமேஸ்வரம், ஜூலை 30

“தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றி பெற்றதாக சிங்கள அரசு குறிப்பாக ராஜபக்ஷ கொண்டாடிய போது எனக்கு தெரியும், இன் னும் சில ஆண்டுகளில் ராஜபக்ஷ

குடும்பம் உயிரை காப்பாற்றிக் கொள்ள இலங்கையை விட்டு தப்பி செல்வார்கள் என நான் அன்று சொன்னது இன்று நடந்துள்ளது”, என ம. தி. மு. க. பொது செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இராமேஸ்வரம் - பாம்பனில் ம.தி.மு.க கட்சி பிரமுகரின் திருமண விழாவில் நேற்று கலந்துகொண்ட ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ மணமக்களை வாழ்த்தி மேடையில் பேசினார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இறுதிக்கட்டப் போரில் பல நாடுகளின் உதவியால் மட்டுமே விடுதலை

புலிகளை இலங்கை இராணுவத்தால் வெற்றி பெற முடிந்தது. இலங்கை இறுதிக் கட்ட போரின்போது தமிழ் மக்களை கொன்று குவித்த ராஜபக்ஷ குடும்பத்தினர் இப்போது உயிருக்கு பயந்து பல நாடுகளில் தஞ்சம் கோரி வருகின்றனர். சிங்கப்பூரில் தஞ்சமடைந்துள்ள கோட்டாபய இந்தியாவிற்கு வர முயற்சி செய்கிறார் என்று தெரிய வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றி பெற்றதாக சிங்கள அரசு குறிப்பாக ராஜபக்ஷ கொண்டாடியபோது எனக்கு தெரியும், இன்னும் சில ஆண்டுகளில் ராஜபக்ஷ குடும்பம் உயிரை காப்பாற்றிக் கொள்ள இலங்கையை விட்டு தப்பி செல்வார்கள் என நான் அன்று சொன்னது இன்று நடந்துள்ளது - என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் தொடர்ந்து மூன்று முறை 30இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதைத் தடுக்க வேண்டிய மத்திய அரசு வேடிக்கை பார்த்து வருகிறது. மீனவர்களை பாதுகாக்கும் கடமை மத்திய அரசிடம் உள்ளது. ஆனால், அதனை மத்திய அரசு தவறவிட்டுள்ளது.

இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் உள்ளது. எனவே? மீனவர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்யவேண்டும் என தெரிவித்தார்.

(ஐ)

# அ. தி. மு. க. பொதுக்குழு விவகாரம் உயர்நீதிமன்று விசாரிக்க அனுமதி!

சென்னை, ஜூலை 30

அ. தி. மு. க. பொதுக்குழு விவகாரம் தொடர்பான வழக்கை மீண்டும் உயர் நீதிமன்றமே விசாரிக்கலாம். இந்த வழக்கை 3 வாரத்தில் உயர் நீதிமன்றம் விசாரித்து முடிக்க வேண்டும். அதுவரை தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அ. தி. மு. க. ஒற்றைத் தலைமை விவகாரம் அக்கட்சியில் பெரும் குழப்பத்தை

ஏற்படுத்தியிருந்த நிலையில், அ. தி. மு. க. பொதுக் குழுவுக்கு தடை விதிக்க கோரி ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி, பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு

அளித்துள்ளதால் பொதுக் குழுவை நடத்தலாம். உட்கட்சி விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது. சட்டப்படி பொதுக்குழுவை நடத்தலாம். விதிகளை மீறினால் நீதிமன்றத்தை நாடலாம் என தீர்ப்பளித்தார்.

இதையடுத்து, கடந்த 11ஆம் திகதி அ. தி. மு. க. பொதுக் குழு நடத்தப்பட்டு, எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச் செயலாளராக தேர்தெடுக்கப்பட்டார்.

அத்துடன் 15 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதில், சிறப்பு தீர்மானமாக ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குவது தொடர்பான இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்நிலையில், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் அ.தி.மு.க. பொதுகுழுவுக்கு அனுமதி அளித்த உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு கடந்த 13ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு, உச்சநீதிமன்ற அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.


வாதவிவாதங்களை தொடர்ந்து, நீதிபதிகள், ”இந்த விவகாரத்தில் நாங்கள் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. எனவே, இந்த வழக்கில், தற்போதைய நிலையே

தொடர வேண்டும். இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றமே விசாரிக்கலாம்” என தெரிவித்தனர். அத்துடன்,”அ. தி. மு. க. பொதுக்குழு விவகாரம் தொடர்பான இந்த வழக்கை மீண்டும் உயர் நீதிமன்றமே விசாரிக்கலாம். வழக்கை 3 வாரத்தில் விசாரித்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

(ஐ)

# வலுவான அரசு என்பது கட்டுப்படுத்துவது அல்ல!

## இந்தியப் பிரதமர் மோடி



சென்னை, ஜூலை 30

“வலுவான அரசு என்பது கட்டுப்படுத்துவது அல்ல, பொறுப்புமிக்கது” என்று பிரதமர் மோடி அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த இந்தப் பட்டமளிப்பு விழாவில் பேசிய பிரதமர், ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவின் இளைஞர்களை நம்பிக்கையோடு

பார்த்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில், நீங்கள்தான் நாட்டின் வளர்ச்சி எந்திரங்கள் இந்தியா உலகின் வளர்ச்சி எந்திரமாக உள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று இதுவரை கண்டிராத பாதிப்பாகும். ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை வரும் இந்த நெருக்கடியை எவரும் சாதாரணமாக கையாள இயலாது. இது அனைத்து நாடுகளையும் சோதனைக்கு உட்படுத்தியது. நாம் எவ்வளவு எதிர்நிலைகளை சந்தித்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அறியப்படாத ஒன்றை இந்தியா நம்பிக்கையோடு எதிர்கொண்டது.

கடந்த ஆண்டு 83 பில்லியன் டொலருக்கும் அதிகமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை பெற்றுள்ளது. புதிய தொழில்களும் பெருந்தொற்றுக்கு பிந்தைய காலத்தில் சாதனை அளவாக நிதி ஆதாரத்தை பெற்றுள்ளன. மேலும் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பில் இந்தியாவின் நிலை முன்னெப்போதும் இல்லாத சிறப்பை பெற்றுள்ளது.

வலுவான அரசு என்பது அனைத்தையும், அனைவரையும் கட்டுப்படுத்துவது அல்ல,

தலையீட்டுக்கான நடைமுறையின் காரணத்தை கட்டுப்படுத்துவது. வலுவான அரசு


என்பது கட்டுப்படுத்துவது அல்ல, பொறுப்புமிக்கது.

இளம் தலைமுறையிடம் எனது நம்பிக்கை உள்ளது. அவர்களிலிருந்துதான் ஊழியர்கள் வருவார்கள். அவர்கள் அனைத்து பிரச்னைகளிலிருந்தும் வெளிவர சிங்கங்கள்போல் பாடுபடுவார்கள் என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளால் ஒட்டுமொத்த உலகமும் இன்று இந்தியாவின் இளைஞர்களை எதிர்நோக்கியிருக்கிறது- என்றார்.

(ஐ)

# போராட்டம் என்ற பெயரில் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தோருக்கு மன்னிப்பு இல்லை

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 30

**”அமைதி வழியில் போராட்டம் செய்தவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது. அமைதி வழிப் போராட்டக்காரர்களை நான் அன்றும் மதித்தேன் இன்றும் மதிக்கின்றேன். ஆனால், போராட்டம் என்ற பெயரில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களையும், அரசகட்டடங்களுக்குள் நுழைந்து பொருள்களைத் திருடியவர் களையும் மன்னிக்கமுடியாது.”**

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டத்தின்போது வன் முறையில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்து வருகின்றனர்.

குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றம் தண்டனையை வழங்கும். இதில் எவரும் தலையிட முடியாது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒளிபரப்புச் சேவைகளுக்கு இடையூறு விளைத்தவர்களை எப்படி மன்னிக்க முடியும்? அவர்களை எப்படி அஹிம்சை வழிப் போராட்டக்காரர்கள் என்று கூறமுடியும்?

அஹிம்சை வழியில் போராடியவர்களில் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு எதிராக எவரும் கூக்குரல் எழுப்ப முடியாது-என்றார். (அ)

# முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகத்தில் பொலிஸ் தேடுதல்

கொழும்பு, ஜூலை 30

நுகேகொடையில் உள்ள முன்னிலை சோசலிச கட்சியின் தலைமை அலுவலகத்தை இரண்டு பொலிஸ் குழுக்கள் நேற்று காலை சோதனையிட்டுள்ளன.

சிவில் உடையில் இருந்த 10 உத்தியோகத்தர்களைக் கொண்ட முதல் குழு, சீருடையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் சோதனைப் பிடியாணை இல்லாமல் சட்டவிரோதமான முறையில் சோதனை நடத்தியதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

சீருடை அணிந்திருந்த சுமார் 30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய இரண்டாவது குழு, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேயிடம் தேடுதல் ஆணையை வழங்கியதாகவும் நாகமுவகுறிப்பிட்டார்.

இரு குழுக்களும் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி கட்சி அலுவலகத்தை விட்டு வெளியேறினர் என்று அவர் கூறினார்.

முதல் குழு காலை 7.30 மணிக்கு வந்ததாகவும், இரண்டாவது குழு சிறிது நேரத்தில் வந்ததாகவும் நாகமுவ குறிப்பிட்டார்.

விசாரணையின் போது முதல் குழு எந்த தகவலையும் வெளியிடவில்லை என்றும், இரண்டாவது குழு அதிகாரிகள் முதல் குழுவைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்றும் பிரசார செயலாளர் கூறினார். (அ)




# போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு எதிராகக் கவனயீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 30

காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு எதிராகவும் அதனை தடுத்து நிறுத்தவேண்டுமெனை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டசெயலகம் முன்பாக நேற்று காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யாதே கைது செய்யாதே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யாதே, நிறுத்து நிறுத்து அடக்குமுறைகளை நிறுத்தவேண்டும், வேண்டும். ஜனநாயக உரிமை போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# போராட்டக்காரர்கள் கைதை எதிர்த்து மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்!

மன்னார், ஜூலை 30

காலி முகத்திடல் அமைதி வழிப் போராட்டக்காரர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பத்தையும், கைது நடவடிக்கைகளையும் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் மன்னாரில் இடம்பெற்றது.




இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்தனர்.

அமைதிவழிப் போராட்டக்காரர்களையும் , ஊடகவியலாளரையும்,சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் தாக்குவதை நிறுத்துமாறு இலங்கை அரசை கோருவதாகவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ,மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் , இளைஞர்,யுவதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில்-

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய நாம், சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த மனித உரிமை பாதுகாவலர்கள் , சிவில் அமைப்புகள்,பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து போராட்டக் காரர்களையும் உடன் விடுவிக்குமாறு நாம் அரசை வேண்டுகிறோம்.

இலங்கைத் தீவின் அதிகாரங்களற்ற சாதாரண பொது மக்கள் ஜனநாயகமான மக்கள் போராட்டத்தின் (அரகலய) மூலம் சர்வாதிகார ராஜபக்ச ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இலங்கைத் தீவின் மக்கள் எனும் வகையில் நாம் பெருமிதமடைகிறோம்.

தமிழின அழிப்புக்கும், போர்க் குற்றங்களுக்கும் பொறுப்பான பேரினவாதப் பாதுகாவலர்களான ராஜபக்சர்களை மண்டியிடச் செய்த மக்கள் போராட்டத்துக்கு தலை வணங்குகிறோம்.முழு நாடும் ஜனநாயக ஆட்சி மாற்றத்திற்காக காத்திருந்தது.

எனினும், மக்கள் போராட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அதிகார மாற்றத்தின் காரணமாக அதிகாரத்துக்கு வந்தவர்கள் அதே மக்களுக்கு எதிராக திரும்பி அந்த மக்களின் குரலை நசுக்குவது சந்தர்ப்ப வாதமாகும்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் வன்முறையான ஜனநாயக விரோதமான நடவடிக்கைகள் நாட்டை மீளவும் ஒரு இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்லும் என நாம் அஞ்சுகிறோம்.

எனவே, மக்களுக்கு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் மீறுதலை உடன் நிறுத்துமாறும், ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் உறுதிப்படுத்துமாறும் நாம் இலங்கை அரசைக் கோருகிறோம்-என்றுள்ளது. (அ)

# ஜூன் மாதத்தில் 20 சதவீதத்தால் அதிகரித்த ஏற்றுமதி வருமானம்!

கொழும்பு, ஜூலை 30

கடந்த ஜூன் மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 1,208 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவிக்கிறது.

இந்த அதிகரிப்பானது இருபது சதவீதம் அதிகரிப்பாகும்.

ஆடை மற்றும் புடைவை ஏற்றுமதி ஜூன் மாதத்தில் 566.78 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது.

தேயிலை ஏற்றுமதி 116.49 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளது. இறப்பர் தொடர்பான பொருட்கள் ஏற்றுமதி மூலம் 102.36 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவிக்கிறது. (அ)

ஈழநாடு



# ரணில் அரசின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!

## சிவில் அமைப்புக்கள் பங்கேற்பு



கொழும்பு, ஜூலை. 30

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கைது நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்தி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரி நேற்று காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் மதகுரு மார்கள் மற் றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

சிவில் சமூகத்தின் நியாயமான போராட்டத்துடன் நாங்கள் இருக்கிறோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டகுழுவினர், சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர்கள் தனுஷ்க ராமநாயக்க மற்றும் ஷனுக்ககருணாரத்ன ஆகியோரும் காலிமுகத்திடல் போராட்ட மைதானத்துக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவ மதகுரு மார்கள் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடினர். (அ)

# பெதும் கேர்ணருக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை. 30

சமூக ஊடக செயற்பாட்டாளர் பதும் கேர்ணருக்கு ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக நேற்று முன்தினம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்கு வந்த அவர் வாக்குமூலத்தை வழங்கியிருந்த நிலையில், அதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13ஆம் திகதி பத்தரமுல்லை - பொல்துவ சந்தியில் நின்று இடப்பட்டிருந்த வீதித் தடைகளை உடைத்து அந்த இடத்தில் இருந்த மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பட்டலந்த முறையை மக்கள் கோரவில்லை!

## கூறுகிறார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜூலை. 30

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பட்டலந்த மாதிரி முறையை மாற்றுமாறு கோரவில்லை என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க தன்னை திருத்திக் கொள்ளும் வாய்ப்பை இழந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றாமல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிய சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க ரணில் உழைத்திருக்கவேண்டும், ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் கூறினார்.

பட்டலந்த சித்திரவதை முகாம் பற்றிய குற்றச்சாட்டு ரணில் மீது சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொடர்ந்தும் ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை. 30

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய மற்றும் கனேடிய டொலர்கள், யூரோ மற்றும் ஸ்ரேலிங் பவுண்ஸ்ஸுக்கு எதிராக ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்கிடையில், அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு சற்று உயர்ந்துள்ளது, அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு கான கொள்வனவு விலை ரூ. 357.16 ஆகவும் விற்பனை விலை 368.41 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ)

# ஜனாதிபதியின் கொடியில் படுத்தவர் பொலிஸில் சரண்!



கொழும்பு, ஜூலை. 30

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கொடியை படுக்கை விரிப்பாக பாவித்து சமூக ஊடகங்களில் காணொளியை வெளியிட்ட நபர் ஒருவர் தனது சட்டத்தரணி ஊடாக வெல்லவீதிய பொலிஸில் சரணடைந்துள்ளார்.

சந்தேக நபர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர் என்பதுடன் தொழிற்சங்கத் தலைவராகவும் செயற்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எரிபொருள் விநியோகம் நிறைவடைந்த பின் மக்கள் வரிசைகளில் காத்திருக்கவேண்டாம்

கொழும்பு, ஜூலை. 30

நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகம் நிறைவடைந்தபின்னர் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் உப தலைவர் குசும் சந்தநாயக்க இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கியூ.ஆர் குறியீட்டு முறைமைக்கு அமைய மாத்திரம், எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# 6 மில்லியனுக்கும் அதிகமானோர் பூஸ்டர் ஊசிகளைப் பெறவில்லை

கொழும்பு, ஜூலை. 30

நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட ஆறு மில்லியனுக்கும் அதிகமானோ கொவிட் பூஸ்டர் ஊசிகளைப் பெறவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், தற்போதைய நாட்களில் வழமையை விட அதிகளவு தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு ஊசிகளை மட்டும் பெற்றவர்களிடையே கோவிட் வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கான நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு குறைவாக காணப்படும் என்று வைத்தியர் கூறினார்.

பிரதம தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சமித்த கினிகே இதனை தெரிவித்தார்.

பூஸ்டர்களாக வழங்கக்கூடிய பைஸர் தடுப்பூசிகள், சுகாதார அமைச்சின் களஞ்சியசாலைகளில் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# யாழ்.பல்கலைக்கழக இஸ்லாமிய மாணவர்கள் உணவு பகிர்ந்தளிப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை. 30

ஹஜ் பெருநாள் நிறைவையொட்டி இன மத ஐக்கியத்தை ஏற்படுத்தும் முகமாகவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டும் கலைப்பீட இஸ்லாமிய மாணவர்களால் முதன்முறையாக யாழ் பல்கலைக்கழகத்தில் உணவு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது கலைப்பீட பீடாதிபதி, கலைப்பீட உதவிப் பதிவாளர் மற்றும் விரிவுரையாளர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# இலங்கைக்கு புதிய நிதி உதவி வழங்கும் தீர்மானம் கிடையாது

## உலக வங்கி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 30**

**இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் அதன் தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.**

எனினும், போதுமான பேரின பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கும் வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க திட்டமிடவில்லை எனவும் அது கூறியுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்ட ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

மேலும் இந்த நெருக்கடியை உருவாக்கிய அடிப்படைக் கட்டமைப்பு காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் எதிர்கால மீட்சி மற்றும் அபிவிருத்தி மீள்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மருந்துகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு, வரிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையைப் போக்க கடந்த காலங்களில் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றுவரை, இந்த நிதியில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்டுள்ளன.

இந்த வளங்கள் ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக வலுவான கட்டுப்பாடுகள் மற்றும் நம்பிக்கைக்குரிய மேற்பார்வையை நிறுவுவதற்கு, அதனை செயல்படுத்தும் முகவர்களுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்.

இதனை தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணிப்போம். இலங்கை மக்களுக்கு எங்களுடைய ஆதரவை அதிகரிக்க மற்ற அபிவிருத்தி பங்காளிகளுடன் நாங்கள் நெருக்கமாக ஒருங்கிணைத்து வருகிறோம் என்றும் அதில் தெரிவித்துள்ளது. (அ)



# தொண்டைமானாறு கடற்கரையில் இறந்து கரையொதுங்கும் மீன்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

தொண்டைமானாறு கடல் நீர் ஏரியில் இறந்த நிலையில் அதிகளவிலான மீன்கள் கரையொதுங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கடல் ஏரியின் நீர் மட்டம் குறைந்து உப்பு செறிவு அதிகரித்ததன் விளைவாக இவ்வாறு மீன்கள் இறந்திருக்கலாம் என மீனவர்கள் தெரிவித்தனர்.

தொண்டமனாறு கடல் நீரேரியின் மேலதிக பாய்ச்சல் நீர் கடலுக்க்கு செல்லாமல் உவர் நீர் மட்டத்தின் அளவை குறைத்து நன்னீர் ஆக்கும் திட்டத்திற்கு அமைவாக கடந்த ஐந்து வருடத்துக்கு மேலாக தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளமையாலேயே இவ்வாறு உப்பு செறிவு அதிகரிப்பு ஏற்படுவதாகவும் இதன் விளை வாகவே மீன்கள் இறப்பதாகவும் மீனவர்கள் மேலும் கூறினர். (அ-02)

# கண்ணீர்ப்புகை குண்டை விற்க முயன்றவர் கைது!

கொழும்பு, ஜூலை 30

பத்தரமுல்லை, பொல்துவ சந்தியில் பொலிஸாரிடம் இருந்து திருடப்பட்ட கண்ணீர் புகைக்குண்டு ஒன்றை 1000 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்காக எடுத்து வந்த சமையல்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண தென் குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி பொது ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவினர் பொல்துவ சந்தியில் ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த ஓட்டோவில் கண்ணீர்ப் புகை குண்டுகள் மற்றும் தோட்டாக்களை ஏற்றிச் சென்ற போது,அவர்கள் மீது, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் உட்பட பெரும் கும்பல் தாக்குதல் நடத்தியது.

ஓட்டோவில் இருந்த கண்ணீர்ப் புகைக்குண்டுகள் திருடப்பட்டன.

அங்கு 385 கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் குண்டுகள் திருடப்பட்டன அப்போது, சந்தேகநபரான சமையல்காரர், கண்ணீர் புகைக்குண்டு ஒன்றை திருடி, தான் பணிபுரியும் பத்தரமுல்லையில் உள்ள உணவகத்தில் மறைத்து வைத்தார்.

நேற்று மின்வாரிய சந்தியில் உள்ள மாளிகாவ வீதி தோட்டத்துக்குச் சென்று அதனை விற்பனை செய்ய முடியாமல் திரும்பிக் கொண்டிருந்த போதே கைது அவர் செய்யப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே ஓட்டோவில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கிய சம்பவத்திலும், 13ஆம் திகதி இராணுவ கப் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்திலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறைப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 30 வயதான சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என கூறப்பட்டது. (அ)

# யாழ். பல்கலையில் கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி முதலாம் அணி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி, புதன்கிழமை, மாலை 4.00 மணியளவில் பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் பட்டப்படிப்புகள் பீட கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப் பாணம் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பி. ஞானப் பிரகாசம், மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக் கத்துக்குரிய கலாநிதி எவ். எல். இம்மானுவல் பெர் ணாண்டோ, திருகோணமலை மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் மற்றும் தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொன். பால சுந்தரம்பிள்ளை மற்றும் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவர் வணக்கத் துக்குரிய அருட் தந்தை கலாநிதி ஜே. சி. போல் றொகான், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மத குருமார், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி கற்கைநெறியானது இரண்டு அரையாண்டுகளைக் கொண்ட - ஒரு வருட முழு நேர சுயநிதிக் கற்கைநெறியாகும். இலங்கையின் கல்வி சார் தகுதிகள் கட்டமைப்பின் பிரகாரம் 9 ஆவது தரத்துக்கிணையான இக் கற்நெறியின் கட்டமைப்பு, பாடத்திட்டம் என்பன கிருஸ்தவ நாகரிகத்துறையினால் தயாரிக்கப்பட்டதாகும். கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடம் நிர்வகித்து நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# வடக்குக்கு எரிபொருள் இறக்குமதியை நேரடியாக மேற்கொள்ள விசேட அனுமதி

## காஞ்சன விஜேயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

"எரிபொருள் இறக்குமதியை நேரடியாக மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இணையத்துக்கு விசேட அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்."

- இவ்வாறு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர உறுதியளித்தார்.

வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையத்துக்கும், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சந்திப்பில் கலந்துகொண்ட இணையத்தின் தலைவர் ஜெ.ஸ்ரீசங்கர் இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்த தாவது:

இலங்கை அரசு வெளிநாடுகளிலிருந்து நேரடியாக எரிபொருளை இறக்குவதற்கான அனுமதியை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது. அதற்கு அமைவாக, வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம், பல்வேறு எரிபொருள் இறக்குமதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தது.

இந்தநிலையில் இலங்கை அரசின் அனுமதியைப் பெற்றுக் கொள் வதற்காக அமைச் சரைச் சந்தித்தோம். அவரும் அதற்கு இணங்கியுள்ளார். நாம் அவ்வாறு நேரடியாக இறக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான அமைச் சரவைப் பத்திரத்தை தயார் செய்வதாகவும் அவர் கூறினார். எரிபொருள் நேரடியாக நாம் இறக்கினாலும், எரிபொருளின் விலையில் மாற்றம் செய்ய முடியாது. அரசால் நிர்ணயிக்கும் விலைக்கே விற்பனை செய்ய வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாணத்துக்கு மண்ணெண்ணெய் விநியோகம் நீண்டகாலமாக இடம்பெறாமையையும் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினோம். இதனால் மீனவர்களும், விவசாயிகளும் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை அமைச்சருக்கு விரிவாக எடுத்துரைத்தோம்.

இதையடுத்து, இரு வாரங்களுக்குள் வடக்கு மாகாணத் துக்கு மண்ணெண்ணெய் விநியோகத்துக்கான ஒழுங்கு களை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்தார்-என்றார். (அ)

# சமயத்தில் கனடா!

## எஸ்.ஜெகதீசன்

கனடாவிற்கு விஜயம் செய்த பாப்பரசர் பிரான்ஸிஸ் பழங்குடி மக்களிடம் மன்னிப்பு கோரினார் என்பதும் அதற்கான காரணமும் முக்கிய செய்தியாக உலகம் முழுவதும் உருண்டது. அதனால் கனடாவில் சமயங்களின் நிலை பற்றி சிறிதளவாவது அறிய விரும்புவது மனிதம்.

ஓ கனடா! நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம். கனடா தேசிய கீத ஆரம்பம் இது. 1880 ஆம் ஆண்டு கனடிய தேசீய கீதம் பிரஞ்சு மொழியில் இயற்றப்பட்டது. 1908 ம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. எனினும் 1980 ம் ஆண்டே தேசீய கீதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. கனடாவில்வாழும் 320 இலட்சம் பல்லின மக்களும் ஆஸ்திக நாஸ்திக பேதமின்றி தேசியக்கொடிக்கும், தேசிய கீதத்துக்கும் அக வணக்கம் செலுத்துவது நாட்டின் மகிமை கனடாவிற்கு அக வணக்கம் செய்யும் மரபு உள்ள இச் சமயத்தில் கனடாவில் உத்தியோகபூர்வ மதமாக எதுவும் இல்லை என்பது நினைவில் மெலிதாய் அசைந்தாடுகின்றது. கனடாவுக்குள் மதங்கள் உண்டு. ஆனால் மதங்களுக்குள் கனடா இல்லை! கனடா மதசார்பற்ற ஒரு நாடு என்பதும் கனடிய மக்களுக்கு மதம் என்றுமே ஓர் அடையாளம் அல்ல என்பதும் தெரிந்த எமக்கு - கனடாவில் இருந்து வந்த சமயம் பற்றியோ அல்லது - வந்த சமயம் இருப்பது பற்றியோ - எந்த அளவில் தெரியும்?

உலகத்திலுள்ள பிரதான சமயங்கள் அனைத்தினதும் ஆலயங்களும் உறுப்பினர்களும் கனடாவில் உண்டு.

ஒட்டு மொத்தமாக கனடாவில் 189க்கும் அதிகமான சமய உட்பிரிவுகள் உள்ளதாக கருதப்படுகின்றது. இயற்கையில் இறையை போற்றி அணிவகுத்த செவ்விந்தியரின் இறை வழிபாடு கனடாவில் 15000 வருட நீட்சியை கொண்டுள்ளது. நன்றாக யோசிக்கத் தெரியாத ஆதிவாசிகள் கூட அநாதியில் நல்லதையே யோசிப்பதில் பக்தியுடன் இருந்துள்ளனர்.

அவர்கள் இறைவனை நேசித்தார்களா என்பதை விட இறைவன் அவர்களை நேசித்தார் என்பதே பொருத்தமானது. இறைவனை அடையும் வரை முதியோரையும் நோயுற்றோரையும் விட்டு அகலாத தீவிரம் அவர்களிடம் இருந்தது. செவ்விந்தியர் அல்லது இண்டியன்ஸ் அல்லது எஸ்கிமோ அல்லது பழங்குடி என்றழைப்பதை இன்று இழிவாக கருதி தம்மை முதற் குடிகள் என்றழைப்பவர்கள் அன்று அமைதியை தேடிய பொழுது கடவுள் புகுந்தது நம்பிக்கையின் அடிப்படையில் எதன் மூலம் வாழ்ந்தனரோ அதனை வணங்குவதை வழக்கமாக்குவது அவர்களிடம் கைவிடப்படாத அறமாயிருந்தது.

நிலமோடிகளான அவர்கள் “குறுக்கு வழியில் செல்வதே தூரம் என்பதனை தெய்வ வாக்காக கருதினர். அந்த ஊரோடிகள் கண்டதையும் வழிபட்டனர். கண்ட கண்ட இடமெல்லாம் சேவித்தனர். அவர்களிடமிருந்த சுமார் 800 இனக்குழுக்களும் (Tribes) விதம் விதமாகவே கும்பிட்டனர். சூழலுக்கு ஏற்பவே பிரார்த்தித்தனர். அவர்கள் நெருப்பையும் நீரையும் மண்ணையும் வணங்கினர். மரம் செடி கொடிகளை துதித்தனர். பருவத்துக்கேற்ப பயிரிட்டு பக்தி செலுத்தினர். அந்த மக்கள் பாம்புகளை தொழுதிட - அவை மேலும் நெளிந்தன.

அவர்களிடம் வானில் தவழும் மேகங்கள் தரையில் வழிந்தோடிய நீர் என பொதுவாக இயற்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சக்தியை கண்ட மென்மையான தனி வழிபாடுமிருந்தது. எருமை மாடுகளை கொன்று அதன் எந்தவொரு பாகத்தையும் வீசிவிடாமல் துடிக்கத்துடிக்க உண்டால் எவ்வித சங்கடங்களும் வராது என நம்பிய உக்கிரமான கூட்டு வழிபாடுமிருந்தது. சமவெளிமக்கள் (Plains), இறொக்குவா மக்கள் (Iroquoian Nations) , வட வேடுவர் (Northern Hunters), வட மேற்கு மக்கள் (Northwest Coasters), அல்கோன்கிய குடிகள் (Algonkians), பீடபூமி மக்கள் (Plateau People) என வாழ்ந்த நிலப்பகுதிகளைக் கொண்டு அவர்களுக்குள் ஆறு பிரதம் பிரிவுகள் இருந்தன. ஆனால் வணக்க முறையோ பல்வேறாக திகழ்ந்தன.

என வெவ்வேறு வடிவங்களுக்கு ஒரே பெயர்! ஒரே கடவுள் உருவத்துக்கு வித்தியாசமான பல பெயர்கள்!

உத்தியோகம் அருளும் கடவுள் (Utakke) காகக் கடவுள் (Coyotte) என பல பெயர்களில் பல கடவுள்கள்! ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இவை சகஜமாயிருந்தன. அவர்களின் வேண்டுதல்களை அவை நிறைவேறின. தீ (Thee), சாஸ்தா (Shstha), மயன்(Mayan), லோகா(Loga), மாலா (Mala) மேகலா (Mekala) போன்ற எமக்கும் பரிச்சயமான இறைபெயர்கள் உள்ளிட நூற்றுக்கும் மேற்பட்ட பெயர்களுடன் தெய்வத்தை அவர்கள் போற்றினர். படைக்கும் கடவுள், கலாச்சார கடவுள், நீத்தார் கடவுள், இராட்சத கடவுள், இயல்பான கடவுள், அழிக்கும் கடவுள் என பல வடிவங்களில் கடவுளை ஆண் உருவத்திலும் பெண் உருவத்திலும் கண்டனர். அருவ வழிபாடும் அவர்களிடம் உண்டு. 34 தொன்மவியல்கள் (mythology) அல்லது புராணங்கள் அவர்கள் வழிபாட்டு முறைக்கு சான்று பகர்கின்றன. அறுவடை செய்த சோளத்தை இறைவனுக்குப் படைப்பது அவர்களிடமிருந்த பண்டிகைகளில் ஒன்றாகும்.

ஒரு பிரிவினரான இன்காக்கள் நீத்தார் வழிபாட்டிற்கு முக்கியத்துவமளித்தனர். அவர்களது புத்தாண்டு நாளான மர்கா-அயு என்பது கல்லறைகளுக்குச் சென்று வழிபடும் நீத்தார் நாளாக இன்றும் பேணப்படுகின்றது

கனடாவில் தற்பொழுது ஒரு கோடி முதற்குடி மக்கள் வாழ்கின்றனர். ஆதியில் அவர்களிடம் 150 மொழி வழக்கும் வழிபடும் வழிகளும் இருந்தன! அவற்றை வட்டார வழக்கில் கணக்கிலெடுத்தால் சுமார் 750 முதல் 850 வரை தேறும். அவர்களிடம் சமயத்தைத் தோற்றுவித்தவர்கள் என்று எவருமில்லை . அல்லது வழிபடும் முறையை நெறிப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ எந்தவித அமைப்புகளுமிருக்கவில்லை .

ஐரோப்பியர்கள் அவர்களது மண்ணை அபகரித்த போது - ஆக்கிரமித்தபோது அவர்களது மதமும் சிதைந்தது. இங்கிருந்த அப்பாவிகளின் தொன்மம் அங்கிருந்து வந்த அப் - பாவிகளின் வன்மத்தில் சிதிலமுற்றது. நாடு விட்டு நாடு வந்தவர்களால் நாட்டிலிருந்த தெய்வங்கள் விரட்டப்பட்டன! மதம் பிடித்தவர்கள் நாடு பிடித்தார்கள். 15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரோமன் கத்தோலிக்கம் முதன் முறையாக கனடாவில் மண்டியிட்டது. அதுவரை நின்றும் இருந்தும் கிடந்தும் இஷ்டம் போல் வணங்கியவர்கள் முழங்காலிட வற்புறுத்தப்பட்டனர். அதற்காக அத்தனை சிலுவைப்பாடுகளையும் சுமக்க வலியுறுத்தப்பட்டனர். சொந்த மண்ணில் வாழ வழியற்றுப் போனவர்கள் மதம் மாற்றுவதற்காக கனடாவின் முதற்குடி மக்களை கோரமாக வெட்டி குரூரமான கொலைகளை பெருமளவில் செய்தனர். மலை போல் குவிந்த பிணங்கள் மத்தியில் கொலையாளிகள் கும்பல் ஆக்ரோஷமாக ஆடி ஆரவாரிப்பது அன்றாட வழமையாக நெடுங்காலம் நீடித்தது அன்றைய சரித்திரம்.

அண்ணளவாக இரண்டு லட்சம் பிள்ளைகளை கதறக்கதற பெற்றோரிடமிருந்து பலவந்தமாகப் பிரித்து மூன்று நான்கு வருடங்கள் தொலை தூர விடுதிகளில்



அடைத்தது ரோமன் கத்தோலிக்க மத போதனை.

சாவுக்கு பயந்து சாகாதவரை காலாகாலத்துக்கும் நினைவு கூர்வதற்காக சாவுக்குப் பயந்தவர்கள் சாகடிக்கப்பட்டனர். மனிதகுல மீட்புக்காக இரத்தம் சிந்திய தேவகுமாரன் ஜேசுபிரானின் நாமத்தின் மீது கூறுகூறாக அறுக்கப்பட்ட செவ்விந்தியரின் இரத்தம் சிதறியது. பரமபிதா பரமண்டலத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்க 1610 ம் ஆண்டு நியூபவுண்லாந்தில் கட்டப்பட்ட முதலாவது றோமன் கத்தோலிக்க தேவாலயம் மூலம் கனடாவுக்குள் கிறீஸ்தவம் நித்தியத்துவம் பெற்றது. இன்று 22 மில்லியன் மக்கள் கத்தோலிக்க திருச்பையின் உறுப்பினராகவுள்ளனர்.

சூரியனை வழிபட்ட தமது மூதாதைக்கு பின்னர் சூரியன் தெரியாமல் போன நாட்களே நீண்டதாக முதற்குடிகள் வாழும் பகுதிகளுக்குச் செல்பவர்களுக்கு அனல் கக்குவார்கள் அங்குள்ள தலையாளிகள். பிற மதத்தினர் கனடாவிற்குள் பிரவேசிக்க முடியாது என்ற சட்டம் ரோமன் கத்தோலிக்கர்களால் தீவிரமாக அமுல் படுத்தப் பட்டிருந்த காலகட்டத்தில் 1759 ம் ஆண்டு கியுபெக்கில் குடியமர்ந்த பிரிட்டிஷ் ராணுவ உயர் அதிகாரியான ஜெனரல் சேர் பிரட்ரிக் ஹால்டிமன்ட் முதலாவது யூத மதத்தவராக கருதப்படுகின்றார். அவர் வகித்த பதவி காரணமாக கனடாவில் தங்குவதை தடை செய்ய முடியாமல் போயிற்று. ஆனால் எஸ்தர் பிரான்டியு என்ற யுவதி வாலிபனாக மாறு வேடமிட்டு 1738 ம் ஆண்டு முழுவதும் கனடாவிற்குள் மத மாற்றப்பணியில் ரகஸியமாக இயங்கியுள்ளார் எனவும் அதனால் கனடாவிற்குள் வந்த முதலாவது யூத மதத்தவர் அவர்தான் என்றும் கூறுபவர்களுமுண்டு.

கிறிஸ்தவர்களுக்கு யேசுபிரான் எவ்வளவு முக்கிய மானவரோ அதே போல் மோசஸ் முக்கியமான தீர்க்க தரிசி யூதர்களுக்கு. பைபிள் கிறிஸ்தவரின் புனித நூல் தோரா யூதர்களின் புனித நூல். இன்று கனடாவில் 375000 மக்களை யூத சமுதாயம் கொண்டுள்ளது.

அவர்களுக்கான முதலாவது திருச்சபை (Congregation Emmanu-El Synagogue) 1863 ம் ஆண்டு விக்டோரியா பிரிட்டிஷ் கொலம்பியாவில் உருவாக்கப்பட்டு இன்றும் செயல்படும் அதி பழமைமிக்கது. 1903 ம் ஆண்டளவில்



இந்து சமயம் கனடாவில் தோன்றுவதற்கு இங்கு குடி பெயர்ந்த பஞ்சாபியரும் குஜராத்தியரும் காரணமாவர். கனடாவின் முதலாவது இந்து ஆலயமாக ஸ்ரீ ஹரி மந்தீர் 1903 ல் வன்கூவரில் அமைந்தது. ஹரே ராமா ஹரே கிருஷ்ணா ஆலயம் மனிடோபாவில் 1904 ல் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது கனடாவில் தென் இந்திய வழிபாட்டு முறைகளை பின்பற்றும் 126 இந்து ஆலயங்கள் இருக்குமெனின் அவற்றுள் 86 ரொறண்டோவில் உள்ளன.

வட இந்திய வழிபாட்டு தலங்கள் இவற்றைவிட வேறாக உள்ளன. உதாரணமாக பஞ்சாபியரின் குருத்வாரா மட்டும் 175 உண்டு. வங்காளிகளின் பஞ்சரட்னா ஆலயங்கள் 160 இடங்களில் கிருஷ்ணனின் புகழ் பாடுகின்றன. 297 200 இந்துக்கள் கனடாவில் உள்ளனர். இந்து சமயம் இறைவன் ஒருவனே என சொல்லிக் கொண்டாலும் 320 மில்லியன் (320000 000) கடவுள் உள்ள மதமாக உலகில் ஆராதிக்கப்படுகின்றது என்பது இந்துக்களுக்கே வியப்பளிக்கும் செய்தியாகும்.

19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூலியாட்களாக பெருந்தொகையான சீனர்களும் ஜப்பானியர்களும் வந்த பின்பே பௌத்த மதமும் கனடாவில் முதற்தடவையாக புத்தம் சரணம் கச்சாமி கோசமிடத்தொடங்கியது.

1905 ம் ஆண்டு ஜப்பானியரால் முதலாவது பௌத்த விகாரை வன்கூவரில் சாதுகளுக்கு சரணளிக்கும் சன்னிதானமாயிற்று. எனினும் 20 நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பௌத்த மதம் வியாபகம் அடையத் தொடங்கிற்று. கனடிய அரசாங்கம் அகதி கொள்கைகளில் மாற்றம் செய்ததைத் தொடர்ந்து சீனா ஜப்பான் கம்போடியா ஸ்ரீலங்கா போன்ற நாடுகளிலிருந்து பெருமளவில் மக்கள் புலம் பெயர்ந்ததே இதற்கு காரணம்.

இன்று கனடாவில் 300 375 பேர் பௌத்த மதத்தினராக உள்ளனர். அவர்களுக்காக சுமார் 500 அறச்சாலைகள் சேவை புரிகின்றன. கனடாவின் முதலாவது மசூதி 1938 ம் ஆண்டு அல் ரஜீத் இறை இல்லம் (AI-Rashid Mosque) என்னும் பெயருடன் எட்மண்டன்ட் அல்பேட்டாவில் அமைந்தது. ரொரன்ரோவில் வசிக்கும் சைவர்கள் தினம் ஓர் ஆலயம் என 30 நாட்களும் 30 ஆலயங்களுக்கு செல்லலாம். அல்லது ஒரே நாளில் சகல 30 சன்னதிகளுக்கும் சென்று எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளின் பேரருளைப்பெறலாம் எனின இங்குள்ள மக்களின் பக்தியை வியப்பதா? அல்லது சக்தியை வியப்பதா? ஷோடச தீபங்களான தூபதீபம், அலங்காரதீபம், நாக தீபம், விருஷபதீபம், புருஷாமிக தீபம், சூலதீபம், கமடதிதீபம், கனுதீபம், வியாக்ரதீபம், சிமஹதீபம், துவஜதீபம், மயூர தீபம், ஹம்ஸ தீபம், ஐந்து அடுக்கு தீபம் நட்சத்திரதீபம், மேரு தீபம் ஆகிய 16 தீபங்களையும் ஒரே சமயத்தில் நடைபெறும் 16 ஆலயங்களில் ஆலயத்திற்கு ஒரு தீபமாக வாகனம் வைத்திருப்போரால் தரிசிக்க முடியும் என சுவையாகக் கூறும் அளவிற்கு அருகருகே ஆலயங்கள் அமைந்து பரவசமளிக்கின்றன. வெள்ளை - கறுப்பு - மஞ்சள் இனத்தவர்களும் காதலுடன் எமது ஆலயங்களுக்கு வருகின்றனர். சாஷ்டாங்க - பஞ்சாங்க நமஸ்காரமாக கீழே விழுந்து பணிவாக வணங்கி எம்மை குனிய வைக்கின்றார்கள். பறவை காவடியையும் துலா காவடியையும் அண்ணாந்து பார்த்துத் தாமே நிமிர்ந்து கொள்கின்றார்கள்.

1871 ஆண்டின் கனடிய குடிசன மதிப்பீட்டின் படி கனடாவில் 13 ஆக இருந்த இஸ்லாமிய மக்கள் தொகை 2015 ஆண்டின கணிப்பின்படி 1,053,945 க்கும் அதிகமாக உயர்ந்தது. தமிழர்கள் நிறையும் இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய மசூதிகள் இங்கு நிறைகின்றன. கனடாவில் இன்று பல மத வழிபாடுகள் உள்ளன. 2021ம் ஆண்டு வெளியான கனடா குடிசன மதிப்பு திணைக்கள் கணிப்பின்படி அவற்றுள் கிறீஸ்துவம் 78% இஸ்லாம் 4% யூதரிஸம்1.9% பௌத்தம் 1.4% இந்து 2.0% என்ற வீதாசாரத்தில் முன்ணணியில் திகழ்கின்றன. உதிரி மதங்களும் மிகக் குறைந்த அளவில் ஏராளமாக உண்டு .

கதோலிக்க திருச்சபை, புரட்ஸ்தாந்தம், இஸ்லாம், இந்து சமயம், யூதம், பௌத்தம் கன்பூஸியம், டாவோயிஸம், ஷிந்தோ , சீக்கியம், சமணம், பஹாய் (பாபி), சோறாஸ்ரியனிசம் என முக்கிய சமயங்களின் பட்டியல் நீண்டாலும் அவை ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் ஏராளமாகவும் அவற்றைப் பின்பற்றுவோர் தாரளமாகவும் உள்ளதையும் காணலாம். உலகில் இன்று 4200 மதங்கள் மானிடரால் வழிபடப்படுகின்றன. கனடாவின் பூர்வ குடிகள் ஆசியாவிலிருந்து புலம் பெயர்ந்ததாக அபிப்பிராயம் உண்டு. அவர்கள் வரும் பொழுது எந்தெந்த தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் வைத்தனரோ? - யாரறிவர்?

# இலங்கையில் கொந்தளிப்புக்கு மத்தியில் ராணுவம் கட்டுப்பாட்டுடன் செயல்படக் காரணம் என்ன?




**பிரேரணா**

இலங்கையில் சுமார் 15 நாட்கள் நீடித்த அரசியல் குழப்பத்திற்குப் பிறகுபுதிய அதிபர் பதவியேற்றுள்ளார். ஆனால் சில நாட்களுக்கு நாட்டிற்குள் நடந்த குழப்பங்க ளின் படங்களை உலகமே பார்த்தது.

13 ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கையில் தமிழ் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் வெற்றி பெற்ற இலங்கை ராணுவம், நாட்டில் நடந்த ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகள் மற்றும் அராஜகங்களுக்கு மத்தியில் அரசியலில் தலையிடவில்லை.

இம்முறையும் அரசியல் தொடர்பான ராணுவத்தின் அணுகுமுறையின் அறிகுறிகள் ஜுலை நிகழ்வுகளுக்கு முன்பே தெளிவாகத் தெரிந்தன. “எங்கள் அதிகாரிகள் எவருக்கும் ராணுவ புரட்சி செய்யும் எண்ணம் இல்லை. இது எங்கள் நாட்டில் ஒருபோதும் நடந்ததில்லை. இங்கு அதைச்செய்வது எளிதானதும் அல்ல” என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கமல் குணரட்ண,மே 11 ஆம் திகதி கூறினார்.

அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய பொருளாதார நிச்சயமற்ற சூழ்நிலையில், நாட்டின் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்று கோரி மக்கள் வீதிகளில் இறங்கினர். ஆனால் கோட்டாபய நாட்டை விட்டோ அல்லது அதிபர் பதவியை விட்டோ வெளியேறவில்லை. எனினும் தற்போது கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறி ரணில் விக்கிரமசிங்க அதிபராக உள்ளார். ஆனால் பொருளாதார சவால் இன்னும் உள்ளது.

விக்கிரமசிங்க அதிபராக பதவியேற்ற பின்னர் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை முடிவுக்கு வருமா? இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் நாட்டை மீட்க விக்கிரமசிங்க தவறினால் என்ன நடக்கும்?

பாகிஸ்தானிலும் வங்கதேசத்திலும் ராணுவம் அவ்வப்போது அரசியலில் குறுக்கிடுகிறது. இதே போன்ற உதாரணங்கள் ஆப்பிரிக்கா முதல் லத்தீன் அமெரிக்கா வரையிலும் காணப்படுகின்றன.

இது இலங்கையில் சாத்தியமா? இதைப் புரிந்து கொள்வதற்காக பிபிசி இந்தி, இலங்கையின் அரசியல் மற்றும் ராணுவத்தை தொடர்ந்து கவனித்துவரும் சில

ஆய்வாளர்களிடம் பேசியபோது. அவர்கள் சொல்வது இதோ - ராணுவத்திலும் அரசியலிலும் சிங்கள ஆதிக்கம் இலங்கையில் கடந்த பல மாதங்களாக நிலவி வரும் அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில், அங்குள்ள ராணுவம் மௌனம் காத்து வருகிறது.

ஜுலை 21 ஆம் திகதி இரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத்தவிர, நாட்டில் நிலவும் அமைதியின்மை மற்றும் ஸ்திரமின்மைக்கு மத்தியில் ராணுவம் தன்னை சமநிலையுடனும் கட்டுப்பாட்டுடனும் வைத்திருந்தது.

“இலங்கை ராணுவம் இந்திய துணைக்கண்டத்தின் மற்ற பகுதிகளிலிருந்து, குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் வங்கதேச ராணுவத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. நீங்கள் அதை நாகரீகமான, ஒழுக்கமான ராணுவம் என்று சொல்லலாம்,”என்று இலங்கையின் ஜெனரல் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் கற்பிக்கும் சதீஷ் மோகன்தாஸ் தெரிவித்தார்.

கடந்த 72 ஆண்டுகளில் இலங்கை ராணுவம் தெரிவு செய்யப்பட்ட அரசை எதிர்க்க முயற்சித்ததில்லை. ராணுவம் ஜனநாயக அரசை எப்போதும் மதித்து வந்துள்ளதுடன், அவ்வப்போது அரசுகளுக்கு தனது விசுவாசத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை ராணுவத்தில் சிங்கள பௌத்தர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

நாட்டின் அதிகாரமும் சிங்களவர்களின் கையில்தான் உள்ளது. அதாவது ராணுவத்தில் இருந்து அரசு அதிகாரிகள் வரை பெரும்பான்மைவாதம் ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால்தான் ராணுவத்துக்கும் அரசுக்கும் இடையே மோதல் சம்பவங்கள் நடப்பதில்லை.

“ராணுவம் எப்போதுமே உள்நாட்டுப் பதற்றங்களுடன் போராடி வருகிறது. அது 1983-2009 வரை நாட்டில் நடந்த உள்நாட்டுப் போராக இருந்தாலும் சரி அல்லது வேறு உள் முட்டுக்கட்டைகளாக இருந்தாலும் சரி, இது போன்ற பிரச்னைகளை ராணுவம் தொடர்ந்து சமாளித்து வந்தது. அதிகாரத்தில் தலையிடும் வாய்ப்பு ராணுவத்திற்கு கிடைக்கவேயில்லை,” என்று சதீஷ் குறிப்பிட்டார்.

“நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இதுவரை



அரசியல் ஸ்திரமற்ற தன்மையை அது சந்தித்ததில்லை. இன்று காணப்படும் ஸ்திரமின்மை அல்லது அரசியல் அதிருப்திக்கு முக்கிய காரணம் பொருளாதார சவால்கள். ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் விக்ரமசிங்க மீது நாடு கோபமாக உள்ளது. ஏனெனில் பொருளாதார நெருக்கடி என்ற புதைகுழியில் சிக்கிய நாட்டை காப்பாற்ற தலைமையால் எதையும் செய்யமுடியவில்லை,” என்று அவர் மேலும் கூறினார்.

### இலங்கையின் ஜனநாயக பாரம்பரியம்

நீண்டகாலமாக இலங்கை தொடர்பான செய்திகளை எழுதும், பிபிசி நியூஸ் தெற்காசிய ஆசிரியர் அன்பரசன் எத்திராஜன், “இலங்கையில் ஒரு நல்ல ஜனநாயக பாரம்பரியம் உள்ளது,”என்று கூறுகிறார்.

“நாட்டில் உள்நாட்டுப் போர் முதல் இடதுசாரி கிளர்ச்சி வரை, எல்லா சூழ்நிலைகளிலும் நாடு வலிமையான தலைவர்களால் வழிநடத்தப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் தேர்தல்கள் நடந்தன. எனவே ராணுவ சதிப் புரட்சி என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் நாடு வலுவான. ஜனநாயக பாரம்பரியத்தை கொண்டிருக்கிறது,” என்று அன்பரசன் விளக்குகிறார்.

இந்தியாவின் நன்கு அறியப்பட்ட திங்க் டேங்க் இன்ஸ்டிட்யூட் ஃபார் டிஃபென்ஸ் ஸ்டடீஸ் அண்ட் அனாலிசிஸின் (ஐடிஎஸ்ஏ) மூத்த உறுப்பினரான அஷோக் பெஹூரியாவும் இதை ஒப்புக்கொள்கிறார்.

‘இந்திய துணைக்கண்டத்தில் இதுவரை ராணுவப் புரட்சி நடந்த நாடுகள் என்று பார்த்தால், அவை பாகிஸ் தான் மற்றும் வங்கதேசம். அந்த நாடுகளின் அப்போதைய நிலைமையையும் இலங்கையின் இன்றைய நிலைமையையும் ஒப்பிடுவது சரியல்ல. இலங்கையின் அரசியல் நெருக் கடிக்கு நாட் டின் பொருளாதார வீழ்ச்சியே முக்கிய காரணம்,” என்று பெஹூரியா கூறினார்.



### நெருக்கடி ஆழமானால் என்ன ஆகும்?

நிலைமை மேலும் பதற்றமாகி, நெருக்கடி முன்பை விட இன்னும் ஆழமடைந்தால், அந்த சூழ்நிலையில் ராணுவத்தின் பங்கு என்னவாக இருக்கும்?

இந்தக் கேள்விக்கு பதிலளித்த அன்பரசன் எத்தி ராஜன்,”இது முழுக்க முழுக்க விக்கிரமசிங்கவின் திறமை யைப் பொருத்து இருக்கும். எரிபொருள் தேவையை அவர் எவ்வாறு பூர்த்தி செய்கிறார், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அவர் எங்கிருந்து பணம் கொண்டுவருவார் என்பதையும் பார்க்க வேண் டும். ஏனெனில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு. தீர்ந்து விட்டது. அடிப்படை பொருட்களை இறக்குமதி செய்ய நாடு போராடுகிறது,” என்றுகூறினார்.

பிபிசி சிங்கள சேவை ஆசிரியர் இஷாரா தனசேகரா, ராணுவத்தின் பங்கு என்னவாக இருக்கும் என்பது அரசின் அறிவுறுத்தல்களைப் பொறுத்தே அமையும் என்று கருதுகிறார். அரசு வழங்கும் உத்தரவுகளை ராணுவம் பின்பற்றும் என்றும் கூறுகிறார்.

“இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, நாடு ஆழமான நெருக்கடியை சந்தித்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த சந்தர்ப்பங்களில்கூட ஜனநாயக வழிகளில் மட்டுமே தீர்வுகள் காணப்பட்டன. வரலாற்றில் ராணுவத் தலையீடுகள் இருந்ததை பார்க்கமுடியவில்லை. எதிர்காலத்தில் அத்தகைய வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை,”என்று இஷாரா குறிப்பிட்டார்.

### ராணுவம் மற்றும் அரசு

கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக்காலத்தின் போது , நிர்வாகத்துறை முதல் பல முக்கிய பதவிகளுக்கு ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகளை நியமித்ததாக அஷோக் பெஹூரியா கூறுகிறார்.

நாட்டின் பாதுகாப்புச் செயலராக மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, துறைமுக அதிகார சபையின் தலைவராக ஜெனரல் தயா ரத்நாயகே மற்றும் சுகாதார செயலராக மேஜர் ஜெனரல் சஞ்சீவ் முனசிங்கே ஆகியோர் நியமிக்கப்பட்டனர். முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே, முன்னாள் அதிபரின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக இருந்தார்.



2020ஆம் ஆண்டு கோவிட்-19 நோயைக் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சக்திவாய்ந்த செயலணியை வழிநடத்தும் பொறுப்பு தற்போதைய ராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு வழங்கப்பட்டது. “அவர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தில் நீண்ட அனுபவம் இல்லை. ஆனால் அவர்கள் கடந்த சில ஆண்டுகளில் அரசு செயல்பாடுகள் பற்றி ஓரளவு புரிந்துகொண்டுள்ளனர். அதே நேரத்தில் பிராந்திய லட்சியங்களையும் முழுமையாக புறக்கணிக்க முடியாது.”என்று பெஹூரியா கூறுகிறார்.

2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதாவது கோட்டாபய ராஜபக்ஷ அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், இலங்கை ஊடகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சொல் ‘அதிகாரத்தை ராணுவமயமாக்கல்’ என்பதாகும்.

கோட்டாபய தாமே ஒரு ராணுவ அதிகாரியாக இருந்ததால் இது நடந்தது. 2005 முதல் 2015 வரை அவர் நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தார். 2019 இல் அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ராணுவத்தில் பணியில் இருந்த அல்லது முன்னாள் ராணுவ மற்றும் புலனாய்வுப் பணியாளர்களான குறைந்தபட்சம் 28 பேர், முக்கிய நிர்வாகப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**30.07.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**23.07.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவ பெருவிழா

மட்டக்களப்பு, ஜூலை 30

மட்டக்களப்பு, அமிர்தகளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

ஸ்ரீமாமாங்கப் பிள்ளையார் மகோற்சவம் கடந்த 19 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இறுதிநாள் பிதிர்க்கடன் தீர்க்கும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஆலய தீர்த்தக் கேணியில் நேற்று முன் தினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதி வலம் வருகை தந்ததைத் தொடர்ந்து, நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்த ஆயிரக்கணக்கான பக்த அடியவர்கள் தீர்த்தமாடி தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியதுடன், ஆத்ம சாந்தி பிதிர்க்கடன் தீர்க்கும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.(அ)

# இலங்கை போக்குவரத்து சபை மட்டு. முகாமையாளர் கைது!

மட்டக்களப்பு, ஜூலை. 30

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்காக 75,000 ரூபா இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் நேற்றுமுன்தினம் மாலை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளார். (அ)

# ஒலுவில் மீன்பிடித்துறைமுக செயற்பாடுகள் மீள ஆரம்பம்

அம்பாறை, ஜூலை. 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய ஒலுவில் மீன்பிடித்துறைமுகத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

எம்.எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தின் செயற்பாடுகளை வைபவ ரீதியாக மீள ஆரம்பித்து வைக்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மிக நீண்ட காலமாக தூர்ந்து போயுள்ள மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு மீனவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளதால் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் கனவு நினைவாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வகையில் ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டுக்கு தேவையான அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்ள முடியும்.



இத் துறைமுகத்தின் நுழைவாயில் மண்ணால் மூடப்பட்டதையடுத்து அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டிருந்ததோடு அபிவிருத்திகளும் தடைப்பட்டிருந்தன. மண்ணால் மூடப்பட்டுள்ள நுழைவாயிலிலுள்ள மண்ணை அகற்றி தற்போது ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 500ற்கு மேற்பட்ட ஆழ்கடல் மீனவர்கள் நன்மையடையவுள்ளார்கள்.

மீன்பிடித் துறைமுகம் 03 கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. முதற்கட்டமாக இப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக மீன் ரின் தொழிற்சாலை அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன.

துறைமுக நிர்மாணிப்பினால் அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களில் நீண்ட காலமாக ஏற்பட்டுள்ள கடலரிப்பினால் மீனவர்களும் பொது மக்களும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். இக் கடலரிப்பினை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத் துறை சாரந்த அதிகாரிகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சினால் சமர்ப்பித்த அமைச்சரவை யோசனைக்கமைய இத் துறைமுகம் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள தையடுத்து இத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# கைதான பல்கலை மாணவர்களை விடுவிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்!



அம்பாறை, ஜூலை. 30

காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்க கோரி நேற்று முன்தினம் தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட, தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், அண்மையில் காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட தனிஷ் அலி உள்ளிட்ட ஏனைய மாணவர்களை விடுவிக்கக் கோரியே இந்த ஆர்ப்பாடம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்களால் தற்போதைய அரசாங்கம் செல்லும் அரசியல் ஸ்திரத்தன்மையை கோஷங்கள் மூலம் எடுத்துரைத்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

அத்துடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களை இரவு நேரங்களில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று கைது செய்வதை தடுக்க வேண்டும் எனக்கோரிய கோஷங்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# 300 குடும்பங்களுக்கு உதவி

திருமலை, ஜூலை. 30

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு, பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில், பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

# நிந்தவூர் பிரதேச சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை

அம்பாறை, ஜூலை. 30

எரிபொருள் நெருக்கடிக்கு முகம் கொடுத்து திண்மக்கழிவுகளை முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் குறிப்பிட்டார்.

நிந்தவூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஜூலை மாதத்துக்காக 4 ஆவது சபையின் 52ஆவது கூட்ட அமர்வு கடந்த வியாழக்கிழமை சபை மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் தலைமையில் இடம்பெற்றவேளை அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் பிரச்னை எரிவாயுப் பிரச்னை உள்ளிட்ட மக்கள் பிரச்னைகள் அதனை தொடர்ந்து திண்மக்கழிவு அகற்றல், ஆளணி, காரியாலய ஊழியர்கள் சம்பந்தமாக பிரஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் வரை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படுத்தி வருகிறோம் - என்றார். (அ)

# கேரளா கஞ்சா வைத்திருந்தவர் விசேட அதிரடிப்படையால் கைது!

அம்பாறை, ஜூலை. 30

மோட்டார் சைக்கிளில் 505 கிராம் கேரளா கஞ்சாவினை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்முனைப் பகுதியைச் சேர்ந்த 38 வயது மதிக்கத்தக்கவர். மேற்குறித்த போதைப்பொருளைக் கடத்தி செல்வதற்காக தயாராக இருந்த வேளை கல்முனை வாடி வீட்டு வீதியில் வைத்து சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து தொலைபேசி ஒன்று, 505 கிராம் பொதி செய்யப்பட்ட கேரளா கஞ்சா, ஒரு தொகை பணம், பல்சர் ரக மோட்டார் சைக்கிள், என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



## 170 கரட் இளஞ்சிவப்பு வைரம் அங்கோலாவில்

*லுவாண்டா, ஜூலை 30*

உலகில் மிகப்பெரியதாகக் கருதப்படும் 170 கரட் தூய இளஞ்சிவப்பு வைரத்தை அங்கோலா வைரச் சுரங்க தொழிலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 300 ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டறியப் பட்டதாக மிகப்பெரிய வைரமாக இது கருதபடுபவ தாக அவுஸ்திரேலிய சுரங்க நிறுவனம் தெரிவித் துள்ளது.

தி லுலோ ரோஸ் என்று அழைக்கப்படும் அரிய வைரக் கல் அங்கோலாவின் லுலோ சுரங்கத்தில் லூ காபா டயமண்ட் மற்றும் அதன் பங்காளிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

லூகாபா டயமண்ட் நிறுவனம் முதலீட்டாளர் களுக்கு அளித்த அறிக்கையில், வரலாற்றில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய இளஞ்சிவப்பு வைரங்களில் இதுவும் ஒன்று என்று கூறியுள்ளது.

இவ்வாறான வைரம் மீட்கப்பட்ட செய்தியை அங்கோலா அரசாங்கம் வரவேற்று, மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்த வைரம் சர்வதேச ஏலத்தில் விற்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அதற்கு முன் அதன் உண்மையான மதிப்பை வெளிப்படுத்த அதை வெட்டி மெருகூட்டவேண்டும். மெருகூட்டும் செயன் முறையின் போது

லைரத்தின் எடையில் பாதி அளவு குறையும் எனக் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் இதேபோன்ற இளஞ்சிவப்பு வைரங்கள் சர்வதேச சந்தையில் சாதனை விலைக்கு விற்பனையானது. உதாரணமாக, 59.6 கரட் இளஞ் சிவப்பு 2017 இல் ஹொங்கொங் ஏலத்தில் 71.2 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்டது.

இது இதுவரை விற்கப்பட்ட வைரங்களில் மிகவும் விலை உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கொங்கோவில் ஐ.நா. தளங்கள் மீது பெற்றோல் குண்டுகளால் தாக்குதல்!

### இதுவரை 19 பேர் உயிரிழப்பு

*கின்ஸாசா, ஜூலை 30*

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கே உள்ள பெனியில் ஐ.நா.வுக்கு எதிரான மோசமான போராட்டங்களுக்கு மத்தியில், ஐ.நா. தளம் பெற்றோல் குண்டுகளால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த தாக்குதல்க ளால், குறைந்தது இரண்டு அமைதி காக்கும் தளங்களும் குறிவைக்கப்பட்டன. எனினும், உயிரிழப்பு புள்ளிவிவ ரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

கடந்த திங்கட்கிழமை தொடங்கிய ஐநா எதிர்ப்பு போராட்டங்களைத் தொடர்ந்து நடந்த வன்முறை மோதல்களில், மூன்று ஐநா அமைதி காக்கும் படையி னர் உட்பட குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டனர்.

கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக ஐ.நா பொதுமக்களை பாதுகாக்கவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஐ.நா செய்தித் தொடர்பாளர் கூறுகையில், கிராம மக்களைப் பாதுகாப்பதற்காக மேம்போக்காக உருவாக்கப்பட்ட மை மை போராளிக் குழுக்களும்

போராட்டக்காரர்களுடன் இணைந்துள்ளனர்- என்றார்.

இஸ்லாமிய அரசு குழுவுடன் இணைந்த நேச ஜனநாயக முன்னணி உட்பட 100 க்கும் மேற்பட்ட வெவ்வேறு ஆயுதக் குழுக்கள் கிழக்கில் இயங்குகின்றன.

சமீபத்திய தாக்குதல்களின் அலை நூற்றுக்கணக் கானவர்களைக் கொன்றது மற்றும் பல்லாயிரக் கணக் கானவர்களை இடம்பெயர வழிவகுத்துள்ளது. (அ)

# உக்ரைன் முழுக்க உக்கிர தாக்குதல்!

### கெர்சான் பகுதியைப் பாதுகாக்க ரஷ்யா தீவிரம்

*கீவ், ஜூலை 30*

ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு கெர்சான் பகுதியை மீட்பதற்கான முயற்சிகளை உக்ரைன் முடுக்கி விட்ட நிலையில், ரஷ்யா உக்ரைன் முழுவதும் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

மத்திய நகரமான க்ரோப்பிவ் னிட்ஸ்கி மீது ஏவுகணைகள் தாக்கி யதில் 5பேர் கொல்லப்பட்ட னர் மற்றும் 26பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கிழக்கில் உள்ள பக்முட்டில் மூன்று பேர் இறந்தனர்.

கீவ் அருகே, இராணுவ தளத்தில் 15பேர் காயமடைந்தனர். உக்ரைனின் வடக்கு மற்றும் தெற் குப் பகுதிகளும் பாதிக்கப்பட்டன.

உக்ரைன் நாட்டின் தெற்கில் ரஷ்ய துருப்புக்களை தனிமைப்படுத்த முற்படுகையில் இந்த தாக்குதல் ரஷ்ய துருப்பு களால் முன்னெடுக்கப்பட்டது.



கிழக்குப் பகுதி நகரான கெர் சானில் முக்கியத்துவம் வாய்ந்த அன்டோனிவ்ஸ்கி பாலத்தை உக் ரைன் படையினர் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தினர். இதன்மூலம்

ரஷ்யப் படையினருக்கு வீரர்க ளையும் ஆயுதங்கள், உணவுகள் உள்ளிட்ட பொருட்களை கொண் டுவர முடியாது போயுள்ளது. இதனால், ரஷ்யா உக்ரைன் முழு வதும் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

எவ்வாறாயினும், கெர்சான் பகு தியைப் பாதுகாப்பதற்காக ரஷ்யா கிழக்கு உக்ரைனில் இருந்து தனது படைகளை மீண்டும் நிலை நிறுத்து கிறது என்று உக்ரைனிய இராணு வம் எச்சரித்துள்ளது. (அ)

# ஈராக்கின் பாராளுமன்றத்தை கைப்பற்றிய எதிர்ப்பாளர்கள்!

*பக்தாத், ஜூலை. 30*

ஈராக்கின் பாராளுமன்றத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற் றியுள்ளனர்.

ஈராக்கில் தற்போது அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.முன்னாள் அமைச்சரும் முன்னாள் மாகாண ஆளுநருமான முகமது ஷியா அல்-சூடானி, பிரதமராக போட்டி யிடுவதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். முகமது ஷியா அல்-சூடானி, ஈரான் சார்பு தரப்பினால் பிரதமர் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதமர் முஸ்தபா அல்-காதிமி, பசுமை மண்டலத்திலிருந்து "உடனடியாக வாபஸ் பெற" போராட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுத்தார். பாதுகாப்புப் படைகள் "அரசு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங் களின் பாதுகாப்பையும், பாதுகாப்பு மற்றும் ஒழுங்கிற்கு எந்தத் தீங்கும் ஏற்படாமல் தடுக்கும்" என்று அவர் ஒரு அறிக் கையில் எச்சரித்தார்.

ஈராக்கில் அக்டோபர் 2021 இல் நடந்த தேர்தலில் அல்-சதரின் கட்சி 73 இடங்களை வென்றது. எனினும், 329 ஆசனங்களைக் கொண்ட பாரா ளுமன்றத்தில் எந்த தரப்பும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை.

புதிய அரசாங்கத்தை அமைப்ப தற்கான முயற்சிகள் இதுவரை வெற்றியடையவில்லை.

அத்துடன், அல்-சதர் அரசியல் செயல்பாட்டில் இருந்து வில கினார்.

தற்போது புதிய பிரதமராக ஈரான் ஆதரவுமுகமது ஷியா அல்-சூடானி நியமிக்கப்பட பேச்சுக்கள் நடந்து வருகிறது.



இதற்குஷியா மதகுரு மொக்தாதா அல் சதாரின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட் டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த புதன்கிழமையன்று, அரசாங்க கட்டடங்கள் மற்றும் தூ தரகப் பணிகளின் இருப்பிடமான தலைநகரின் உயர்-பாதுகாப்பு பசுமை மண்டலத்திற்குள் எதிர்ப்பாளர்கள் ஊடுருவினர். அப்போது, பாதுகாப்புப் படை யினர் மட்டுமே கட்டடத்திற்குள் இருந்தனர். அவர்கள் எதிர்ப்பா ளர்கள் உள்ளே நுழைய அனுமதித் தனர்.

சிமெந்து தடுப்பு சுவர்களை இடித்துத் தள்ளும் போராட்டக் காரர்களைத் தடுக்க கலகத் தடுப்புப் பொலிஸார் தண்ணீர் பீரங்கிக ளைப் பயன்படுத்தினர். ஆனால்

போராட்டக்காரர்கள் அந்த பகுதியை உடைத்துக் கொண்டு முன்னேறினர்.

அல்-சூடானியை வெளியேறு மாறு அவர்கள் கோசமெழுப்பினர்.

எனினும், பாராளுமன்றம் ஆக்கிரமிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு,

அல்-சதர் ருவிட்டரில் ஒரு அறிக்கையை வெளியிட்டார், அவர்களின் செய்தி கிடைத்தது என்றும், "பத்திரமாக உங்கள் வீடுகளுக்குத் திரும்புங்கள்"

என்றும், உள்ளிருப்புப் போராட்டத்தை தொடரவேண் டாம் என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து, எதிர்ப்பாளர்கள் பாதுகாப்புப் படையினரின் மேற் பார்வையுடன் பாராளுமன்ற கட்டடத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இந்தச் சம்பவமும், அல்- சூடானியை தலைமையில் அர சாங் கம் அமைத்தால், வரக்கூடிய தீவிரமான நிலைமை குறித்து மறைமுகமான எச்சரிக்கையாக கருதப்படுகிறது.

(அ)



# விடைபெறுகிறார் செபஸ்ரியன் வெட்டல்!

பெர்லின், ஜூலை 30

தொடர்ந்து நான்கு முறை போர்முலா - 1 பந்தயத்தில் உலக சம்பியன் பட்டத்தை வென்றவர் செபஸ்ரியன் வெட்டல். நடப்பு 2022 தொடர் நிறைவடைந்ததும் போர்முலா - 1 பந்தயத்திலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார். இதனை சமூக வலைதளங்களில் காணொலியாக பகிர்ந்துள்ளார்.

ஜேர்மன் நாட்டை சேர்ந்த 35 வயதான செபஸ்ரியன் வெட்டல். போர்முலா - 1 கார் பந்தய விளையாட்டில் பங்கேற்கும் பிரபல கார் ஓட்டிகளில் ஒருவராக அறியப்படுகிறார்.

2010, 2011, 2012 மற்றும் 2013 என தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் போர்முலா - 1 உலக சம்பியன் பட்டத்தை வென்றவர் வெட்டல்.

"நான் 2022 பருவ காலத்துடன் போர்முலா -1 விளையாட்டில் இருந்து விடை பெறுகிறேன். இந்த நேரத்தில் இந்த பயணத்தில் எனக்கு பக்கபலமாக இருந்த நிறைய பேருக்கு நன்றி சொல்ல வேண்டும். ஆனால், நான் ஓய்வு பெறுவதற்கான காரணத்தை விவரிப்பது முக்கியம் என கருதுகிறேன்.

நான் இந்த விளையாட்டை நேசிக்கிறேன். என் வாழ்வில் இரண்டறக் கலந்தது இந்த விளையாட்டு. எனது வாழ்க்கை தடத்துக்கு உள்ளே எந்த அளவுக்கு உள்ளதோ, அதே அளவுக்கு அதற்கு வெளியிலும் உள் ளது. மூன்று குழந்தைகளின் தந்தை நான். அற்புதமான பெண்ணின் கணவன். இயற்கையை நேசிக்கிறேன். எனது சிறந்த பந்தயம் வரும் நாட்களில் வரவுள்ளது. அதை வெல்வேன் என நான் நம்புகிறேன்" என்று பதிவில் தெரிவித்துள்ளார். இந்தப் பதிவு அவரின் முதல் இன்ஸ்ட்ராகிராம் பதிவு என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்தின் அலி; அதிவேக அரைச்சதம்!

பிரிஸ்டல், ஜூலை 30

இங்கிலாந்து வீரர்களில் அதிவேக அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை மொயின் அலி படைத்தார்.

பிரிஸ்டல், இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் இடையிலான முதலாவது இருபது - 20 சர்வதேச கிரிக்கெட் போட்டி பிரிஸ்டலில் புதன்கிழமை இரவு நடந்தது.

இதில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 234 ரன்கள் குவித்தது. இதில், மொயின் அலி 52 ஓட்டங்களும் (18 பந்துகளில் 2 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்) விளாசி உள்ளூர் ரசிகர்களுக்கு விருந்து படைத்தனர்.

இதில், மொயின் அலி 16 பந்துகளில் அரைச்சதத்தை எட்டி இங்கிலாந்து வீரர்களில் அதிவேக அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார். (ஐ)






# பயிற்றுநரை மாற்றினார் பிரிட்டனின் எம்மா!

லண்டன், ஜூலை 30

சம்பியன் பட்டத்தைத் தக்கவைக்க எம்மா ரடுகானு புதிய பயிற்றுநரை நியமித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் முன்னணி இளம் ரென்னிஸ் வீராங்கனை எம்மா ரடுகானு. இவர் தனது புதிய பயிற்றுநராக டிமிட்ரி டர்சுனோவை நியமித்துள்ளார். 19 வயதான ரடுகானு சோதனை அடிப்படையில் டர்சுனோவுடன் இணைந்து பணியாற்றி வருவதை இங்கிலாந்து செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

முன்னாள் ரென்னிஸ் வீரரான டிமிட்ரி டர்சுனோ இதற்கு முன் எலெனா வெஸ்னினா, அரினா சபலெங்கா மற்றும் அனெட் கொன்டவீட் ஆகியோரின் பயிற்றுநராக இருந்துள்ளார்.

அடுத்த மாத இறுதியில் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி தொடங்குகிறது. கடந்த ஆண்டு நடந்த அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் தனது 18 வயதில் பட்டம் வென்று பிரபலமானவர் எம்மா ரடுகானு. இதனால் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் என்ற பட்டத்தை தக்கவைக்க அவர் புதிய பயிற்றுநருடன் சேர்ந்து யுக்திகளை வகுக்க கூடும். (ஐ)

# ரோஸவ் அதிரடி ஆட்டம் தென்னாபிரிக்கா வெற்றி!

கார்டிப், ஜூலை 30

ரோஸவின் அதிரடியான துடுப்பாட்டம் மூலம் 58 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை வென்றது தென்னாபிரிக்கா. இந்த வெற்றியின் மூலம் இருபது - 20 தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலை வகிக்கின்றன.

தென்னாபிரிக்கா அணி இங்கி லாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையி லான 2ஆவது இருபது - 20 போட்டி கார்டிப்பில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.



இதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய தென்னா பிரிக்க அணி 20 ஓவர்கள் முடிவில் ,3 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்களை குவித்தது. அதிகபட்சமாக அந்த அணியின் ரிலீ ரோஸவ் அதிரடி யாக விளையாடி 55 பந்துகளில் 5 சிக்ஸர், 10 பௌண்ட்ரிகள் உள்பட 96 ஓட்டங்களை ஆட்டமிழக்கா மல் குவித்தார். ஹென்ரிக்ஸ் 53 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 208 ஓட்டங்கள் இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. பெயர்ஸ்ரோ அதிகபட்சமாக 30 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் ஜோஸ் பட்லர் அதிரடியாக ஆடி விரைவில் ஆட்டமிழந்தார். அவர் 14 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்தார். மொயின் அலி 28 ஓட்டங்களும், ஜசன் றோய் 20 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர்.

சீரான இடைவெளியில் இங்கிலாந்தின் விக்கெட்கள் வீழ்ந்தன. இறுதியில், இங்கிலாந்து 16.4 ஓவர்களில் 149 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்களை இழந்து ஆட்டமிழந்தது.

இதனால், 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் பெலுகுவாயோ, ஷம்சி ஆகியோர் தலா 3 விக்கெட்களும், நிகிடி 2 விக்கெட்டும் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் இருபது -20 தொடரில் இரு அணிகளும் அணி 1-1 என சமநிலை வகிக்கிறது. (ஐ)

# சர்வகட்சி அரசுக்கான பேச்சுகள் இன்னும் ஒரு வாரத்தில் முடியும்?

**கொழும்பு, ஜூலை 30**
**சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் எதிர்க்கட்சியில் உள்ள கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.**

இந்த பேச்சுவார்த்தை இன்னும் ஒரு வாரத்தில் முடிவடையும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தினார்.

எவ்வாறாயினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன், ஒரு கட்சி என்ற வகையில் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளாது என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தனித்தனியாக ஆளும் தரப்புடன் பேச்சில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும், ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்து சாதகமான சமிக்ஞையை அனுப்பி வைத்துள்ளது. நாட்டை பாதாளத்தில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி உண்மையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார். (அ)

# இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 30
இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அமைச்சரவையின் அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

புதிய முன்மொழிவின் கீழ், மின்சார சபை, உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் என தனிப் பிரிவுகளாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறியுள்ளார். (அ)

# இ.போ.ச பஸ்களில் பயணச்சீட்டுகளை வழங்காத நடத்துநர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 30
பயணிகளிடம் பணம் பெற்று பயணச்சீட்டு வழங்காத இலங்கை போக்குவரத்து சபை பஸ்களின் நடத்துநர்கள் மூவரின் சேவை இடைநிறுத்தப்பட உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மொனராகலையிலிருந்து மாகும்புர வரையிலும் காலி முதல் கடவத்தை வரை பயணிக்கும் அதிவேகப் பஸ்கள் இரண்டும் மற்றும் தங்காலையிலிருந்து எம்பிலிப்பிட்டிய வரையிலான பஸ் ஆகியவற்றில் கடமையாற்றிவந்த நடத்துநர்கள் மூவரே இவ்வாறு பணம் பெற்றுக்கொண்டு பயணச்சீட்டு வழங்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் போது மொனராகலையில் இருந்து மகும்புர செல்லும் பஸ்ஸில் 2,190 ரூபா பெறுமதியான பயணச்சீட்டு ஒன்றும், காலியில் இருந்து கடவத்தை செல்லும் பஸ்ஸில் 1,190 ரூபா பெறுமதியான 9 பயணச்சீட்டுகளும், தங்காலையில் இருந்து எம்பிலிபிட்டிய செல்லும் பஸ்ஸில் 5 பயணச்சீட்டுகளும் வழங்கப்படவில்லை என அந்த அதிகாரி கூறினார். குறித்த பஸ் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காலிமுகத்திடல் போராட்டம் இனி அவசியமில்லை ஆதரவை விலக்கிக்கொண்டது 'பிளக் கப்' இயக்கம்

கொழும்பு, ஜூலை 30
காலிமுகத்திடல் போராட்டம் அரசியல் அரங்குக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் இனி மேல் அதற்கான அவசியமில்லை என கருதுவதால் போராட்டத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக 'பிளக் கப்' இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

காலி முகத்திடல் பேராட்டத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக 'பிளக் கப்' இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த இயக்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தற்போது காலி முகத்திடலில் ஒரு சிறு நிலத்தில் இடம்பெறுவதற்கு மாறாக பரந்த அரசியல் வெளியில் நடைபெறுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டத்தில் அடையாள வெற்றிகள் கிடைத்துள்ளதாகவும் தொடர்ந்தும் அங்கிருந்து போராட வேண்டிய அவசியமில்லை எனவும் 'பிளக் கப்' இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# ஒகஸ்ட் 1 முதல் கியூ.ஆர் முறையில் மாத்திரம் எரிபொருள் விநியோகம்

கொழும்பு, ஜூலை 30
எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கியூ.ஆர். முறைமையின் கீழ் மாத்திரம் எரிபொருளை விநியோகிக்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரினால் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பொதுபோக்கு வரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்காக எரி பொருள் விநியோகிக்கும் அளவு தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# இரண்டு வாரங்களில் மின் கட்டணம் உயரும்

கொழும்பு, ஜூலை. 30
இரண்டு வாரங்களில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவது குறித்து இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டிருந்த கட்டணத் திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெறும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

சுமார் 50 பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் நேற்று முன்தினம் கருத்துக்களை பெற்றுக் கொண்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், மின்சாரக் கட்டணங்களை அதிகரித்தல் அலகுகளுக்கான கட்டண நிர்ணயம் என்பன குறித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிர்ணயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் இரண்டு வார காலப் பகுதியில் கட்டண அதிகரிப்பு குறித்து தீர்மானம் எடுக்கப்படும் ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# எப்போதும் இலங்கையை வழிநடத்தும் கோட்பாட்டை பின்பற்றுகின்றது சீனா!

## அந்நாட்டு வெளிவிவகார பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30
எப்பொழுதும் இலங்கையை வழிநடத்தும் கோட்பாட்டை பின்பற்றுவதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாவோ லிஜியன் தெரிவித்துள்ளார்.

அனைத்து ஒத்துழைப்பு திட்டங்களும் விஞ்ஞான திட்டமிடல் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அவை எந்த அரசியல் விடயத்திலும் இணைக்கப்படவில்லை. அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்துக்கு அந்த கடன்கள் பங்களித்துள்ளதுடன் இலங்கை மக்களுக்கு உறுதியான நன்மைகளையும் கொண்டு வந்துள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாவோ லிஜியன் கூறியுள்ளார்.

யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிர்வாகியான சமந்தா பவர், நேற்று முன்தினம் புதுடில்லியில் சுமத்திய குற்றச்சாட்டில், சீனா இலங்கைக்கு வழங்கியுள்ள கடன்கள், திட்டமிடப்படாத ஒளிபுகாத கடன்கள் என்று குறிப்பிட்டமைக்கு பதில் வழங்கும் வகையிலேயே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரின் கூற்று அமைந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் பல கூறுகளைக் கொண்டது. சர்வதேச மூலதனச் சந்தை மற்றும் பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளைக் காட்டிலும் சீனா தொடர்பான கடன்களின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது என்று சாவோ லிஜியன் குறிப்பிட்டார்.

சீனா பெரும்பாலும் இலங்கைக்கு குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் நீண்ட கால முதிர்ச்சியுடன் கூடிய முன்னுரிமைக் கடன்களை வழங்குகிறது.

இது இலங்கையின் உள் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவியது.

சர்வதேச கடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதாக இலங்கை அறிவித்த சிறிது நேரத்திலேயே சீன நிதி நிறுவனங்கள் இலங்கை தரப்பை அணுகியதுடன் சீனா தொடர்பான முதிர்ச்சியடைந்த கடன்களை கையாள்வதற்கும் சரியான வழியை கண்டறியவும் தயார் நிலையை காட்டியதாக சாவோ லிஜியன் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் சமீபத்திய திடீர் வட்டி விகித உயர்வு மற்றும் இருப்புநிலைக் குறைப்பு ஆகியவற்றின் விளைவாக உலகப் பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் சீனப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வழிதவறிய ஒருதலைப்பட்ச தடைகளே தொழில்துறைகளின் பாதுகாப்பைக் குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளன.

அத்துடன் இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருளாதார மற்றும் நிதி நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

இலங்கை போன்ற வளரும் நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு அமெரிக்கா என்ன செய்திருக்கிறது என்று தன்னைத் தானே கேட்கவேண்டும் என்றும் சீன பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# கொரோனா தொற்று 10 வீதத்தால் உயர்வு

கொழும்பு, ஜூலை 30
நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் சுமார் 10 வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில், சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

தினமும் 4 முதல் 5 கொரோனா மரணங்கள் பதிவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளுமாறும், அதற்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் கூறினார்.

நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## கோட்டாபயவை...

அத்துடன், கனடாவின் பிரதமராக தான் தெரிவாகும்பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் கனடாவின் நிரந்தர தூதரக சேவைகளை வழங்கும் நிலையம் ஒன்று திறக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

தற்போது, கனடாவின் பிரதான எதிர்க்கட்சியாக பழமைவாதக் கட்சி உள்ளது. இந்தக் கட்சியின் தலைமைப் பதவிக்கான உட்கட்சி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி நடக்கவுள்ளது. இந்தத் தேர்தலிலும், அதன் பின்னரான நாட்டின் பொதுத் தேர்தலிலும் பியார் பொய்லிஎவ்ரா வெற்றிபெற்று கனடாவின் அடுத்த பிரதமராவார் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பியார் பொய்லிஎவ்ராவின் பகிரங்க அறிவிப்பு கனடாவில் மட்டுமின்றி சர்வதேச அரசியல் மட்டத்திலும் பெரும் கவனத்தையும் - அதிர்வலையையும் ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பியார் பொய்லிஎவ்ரா வெளியிட்ட அறிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது சிங்கப்பூரில் உள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான கோரிக்கைகளில் இலங்கை மனித உரிமைகள் வழக்கறிஞர்களுடன் இணைந்து, சர்வதேச நீதிமன்றம் அல்லது நீதிமன்றத்தின் முன் நீதியை நிலைநாட்ட கனடா அரசாங்கத்தின் முழுப் பொறுப்பையும் கொண்டு வருவேன்.

"தமிழ் மக்களின் அழிவுகரமான இனப்படுகொலையைத் தொடர்ந்து நல்லிணக்கத்திற்காக அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க விரும்பும் இலங்கையர்களின் விருப்பத்துக்கு மதிப்பளிக்குமாறும் அழைப்பு விடுக்கிறோம். ஏற்கனவே வடக்கு, கிழக்கில் பெண்களும் சிறுபான்மையினரும் யுத்தம் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பால் கொடூரமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர் -என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜஸ்ரின் ட்ரூடோ ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், கனடாவின் பிரதமராக இருந்தவர் ஸ் ரீபன் ஹார்பர் (2006-2015). இவரின் ஆட்சி ராஜபக்ஷக்களின் அரசுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியவர் முன்னாள் பிரதமர் ஸ் ரீபன் ஹார்பர். இவர் பியார் பொய்லிஎவ்ராவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். இந்த நிலையிலேயே இலங்கை குறித்த அவரின் காட்டமான அறிக்கை அரசியல் மட்டங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவை, அவர் இழைத்த போர் குற்றங்களுக்காகக் கைது செய்ய வேண்டும் என்று உண்மை மற்றும் நீதிக்கான சர்வதே செயல்திட்டம் அமைப்பின் சட்டத்தரணிகளால் அந்த நாட்டின் சட்ட மா அதிபரிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னிலை...

இந்தப் பின்னணியில், அந்தக் கட்சியை தடை செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக அரிய முடிகிறது.

இவ்வாறான பின்னணியிலேயே முன்னிலை சோசலிசக் கட்சியின் நுகேகொடையில் உள்ள தலைமை அலுவலகம் நேற்று காலை இரு வேறு குழுவினரால் சோதனையிடப்பட்டுள்ளது.

இரண்டு குழுக்கள் வருகை தந்து அலுவகத்தை சோதனையிட்டதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜாயகொட தெரிவித்தார்.

ஒரு குழு சிவில் உடையில் இருந்ததாகவும் அவர்களிடம் எந்த சோதனை உத்தரவுகளும் இருக்கவில்லை எனவும் தெரிவித்த கட்சியின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர், 2 ஆவதாக வந்த குழு மிரிஹானை விசேட விசாரணைப் பிரிவினர் என அடையாளப்படுத்தியதாக குறிப்பிட்டார்.

முதலில் வந்த குழுவினர் வெள்ளை வானில் வருகை தந்து சோதனையிட்டதாக முன்னிலை சோசலிசக் கட்சி கல்வி செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

முதலில் காலை 7.30 மணிக்கு வந்த குழுவில் பொலிஸ் சீருடையுடன் பொலிஸ் அதிகாரி ஒருவர் இருந்ததுடன் ஏனைய 10இற்கும் மேற்பட்டோர் சிவில் உடையில் இருந்ததாக அவர் கூறினார்.

சோதனை நடவடிக்கை குறித்து முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ கருத்து வெளியிடுகையில்,

"முதலில் சோதனைக்காக வந்தவர்கள் எந்த பொலிஸ் நிலையத்தை சேர்ந்தவர்கள் என வினவிய போதும், பதிலளிக்க மறுத்துவிட்டனர். அவர்களிடம் எந்த சோதனை அனுமதி உத்தரவும் இருக்கவில்லை. அவர்கள் சென்றதும் பொலிஸ் சீருடையில் சிலர் வந்தனர். அவர்கள் தங்களை மிரிஹானை பொலிஸ் நிலைய அதிகாரிகள் என அடையாளப்படுத்தினர்.

அவர்களுக்கு முன்னர் வந்த குழுவினர் தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

சோதனைக்கான நீதிமன்ற உத்தரவில், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவின் பிடியாணைக்கான பெயர் இருந்ததது.

வசந்த முதலிகேவின் பிடியாணையை வைத்துக்கொண்டு முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகத்திற்கு வருகை தரவேண்டிய அவசியம் இல்லை" என தெரிவித்தார்.

## அவசரகால...

உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமையால், அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என அவர் அந்த மனுவின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வலுவிழக்கச் செய்து உத்தரவிடுமாறு மனுதாரர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத், தற்போதைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

## ஒமைக்ரோன்...

சோதனைக்கு உட்படுத்தல் ஆகிய மூன்று வழிமுறைகளை கண்டிப்பாக மக்கள் பின்பற்ற வேண்டும் என்று சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளரான அவர் கேட்டுள்ளார்.

மேலும், ஒமைக்ரோனின் உபபிறழ்வான பிஏ 5 தொற்றுநோயின் தாக்கம் உலகை மிகப்பெரிய அலையாக தாக்கி வருகிறது. பிஏ 5 உப பிறழ்வின் தாக்கத்தால் நாட்டில், மருத்துவமனையில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக் தொடர்ந்து அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)

## சர்வகட்சி...

ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்ற அமர்வுகள் முடிவடையும் வகையில் ஜனாதிபதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார். இதையடுத்து, புதிய கூட்டத்தொடருக்காக எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆசிரிய உதவியாளர் இறுதித் தேர்வின் பெறுபேறு இன்னும் வெளியாகவில்லை

கொழும்பு, ஜுலை 30

ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்த ஆசிரிய உதவியாளர்களின் இறுதித் தேர்வுக்கான பெறுபேறு கள் இதுவரை வெளியிடப்படாதுள்ளமையை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தர லிங்கம் பிரதீப் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2015 ஆண்டு ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு, வர்த்தமானியின் பிரகாரம் ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு உள்வாங்கப் பட்டனர்.

இதனையடுத்து, ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகள் இதுவரை வெளியிடப் படாதுள்ளன.

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் குறிப்பாக பெருந்தோட்டத்துறை பகுதிகளில் பணிபுரிபவர் களை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இந்தப்பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட வேண்டும்.

இது தொடர்பில் ஏலவே கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் பரீட்சை திணைக்க ளம் இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதன் காரணமாக கல்விமாணி பட்டப் படிப்புகளைப் கற்கும் வாய்ப்பையும் குறித்த ஆசிரியர்கள் இழந்துள்ளனர்.

மிகவும் கடினமான சூழ்நிலை யில் 10 ஆயிரம் ரூபாவினை மாத் திரமே பெற்றுக் கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டதுடன் தமது பயிற்சியையும் முடித்து இறுதிப் பரீட்சைக்குத் ஆசிரியர்கள் தோற்றினர். மிகவும் சிரமமான சூழ்நிலையின் மத்தியிலும் பணி புரியும் இந்த ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர் பணி இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜுலை 30

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் தென் னிலங்கையைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு, பருத்தித்துறை எரிபொ ருள் நிரப்பு நிலையம் ஒன்றின் நிர்வாகி பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு பொலிஸார் சிலர் அடிக்கடி வந்து தனது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திரும்பத் திரும்ப எரிபொருள் பெறுவதாக முறையிட்டிருந்தார்.

சம்பவத்தை அடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை நீதிமன்றில் கடமைக்காக அனுப்பப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக சென்றிருப்பதை அறிந்து, நீதிமன் றத்திற்குச் சென்று பார்வையிட்டிருக்கின்றார்.

அங்கே நீதிமன்றக் காவலாளியு டன் பொலிஸ் உத்தி யோகத்தரின் துப்பாக்கி மட்டும் காணப்பட்டது.

இதனை அடுத்து உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (அ)

# மணல் கடத்திய இருவர் தென்மராட்சியில் கைது

தென்மராட்சி, ஜுலை 30

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் அனுமதி இன்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தை இராணுவத்தினர் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

இந்தப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றுவதாக இராணுவத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியதுடன் அதில் பயணித்த இருவரையும் இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் கொடிக்காமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மைத்திரி...

அரசாங்கத்தை அமைப்பதற்காக சில முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

2015 - 2019 காலப்பகுதியில் சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக முழுக்காலத்துக்கும் நீடித்திருந்தார். எனினும், இருவருக்கும் இடையிலான ஒத்துழைப்பு என்பது பெரியளவில் இருக்கவில்லை.

எனினும், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு சாதகமான அம்சம் காணப்படுகிறது என்றும் இரு வாரங்களில் மீண்டும் சந்திப்போம் என்று ரணில் உத்தரவாதம் அளித்துள்ளார் என்றும் மைத்திரிபால தெரிவித்தார். (ஐ)

## ஐ. எம். எவ்...

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருகிறது. இது தொடர்பான அறிக்கை ஒன்றை ஜனாதிபதி அலுவலகம் நேற்று வெளியிட்டது.

அதில், சர்வதேச நாணய நிதியத்துடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்த கடன் நிலைத்தன்மை குறித்த உறுதியான திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். நாட்டில் அண்மைக்கால அரசியல் ஸ்திரமின்மை மற்றும் நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படாத முன்னைய அரசாங்கத்தின் கொள்கை காரணமாக இது தடைப்பட்டது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான அரசியல் பேச்சுக்களும் வெற்றியடைந்துள்ளன. இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சை வெற்றிகரமாக முடித்து, நிதி நிலைத்தன்மையை உருவாக்கத் தேவையான முதல் படியை எடுக்க முடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு உதவ தயார்!

## கூறுகிறார் கமல் ஹாசன்

கொழும்பு, ஜுலை 30

நடிகரும் இயக்குநருமான பத்ம பூஷன் கமல் ஹாசன் இந்தியாவுக்கான இலங்கை துணைத் தூதுவர் டி. வெங்கடேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, நடிகர் கமல் ஹாசனை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கான இலங்கை துணை தூதுவர் டி. வெங்கடேஸ்வரனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடிகர் கமல்ஹாசன் உதவி உயர்ஸ்தானிகரை சந்தித்துள்ளார்.

இதன்போது, இலங்கை துணைத் தூதுவருக்கும் நடிகர் கமல் ஹாசனுக்கும் இடையில் இலங்கையின் சினிமாத்துறை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

திரைப்பட குழுவினர் மற்றும் தியேட்டர் குழுவினருடன் இலங்கைக்கு வருகை தருமாறும் அது இலங்கைக்கான சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் எனவும் இந்தியாவிற்கான இலங்கை துணைத் தூதுவர் டி. வெங்கடேஸ்வரன் நடிகர் கமல்ஹாசனிடம் தெரிவித்துள்ளார்.

தனது நலத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் இதன்போது கமல் ஹாசன் இந்திய உதவி தூதுவருக்கு தெரிவித்துள்ளார். (அ)

## நாட்டில் நாளாந்தம் பட்டினியால் வாடும் ஒரு இலட்சம் குடும்பங்கள்

கொழும்பு, ஜுலை 30

இந்த நாட்டில் ஒரு இலட்சம் குடும்பங்கள் தினமும் உணவு கிடைக்காமல் பட்டினியில் வாடுவதாக உணவு பாதுகாப்புக் குழுவின் தலைவர் கலாநிதி சுரேன் படகொட தெரிவித்துள்ளார்.

மேலும், 75,000 குடும்பங்கள் தினசரி என்ன சாப்பிடுவது என்று தெரியாமல், உணவு நிச்சயமற்ற நிலையில் இருப்பதாகவும், 40,000 பேர் "சேலைன் " மூலம் போஷாக்கை பெறுவதாகவும் அவர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். தற்போது நிலவும் நெருக்கடிக்கு உரிய தீர்வுகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால் இந்த நிலைமை மிகவும் மோசமானதாக அமையும் எனவும் படகொட மேலும் கூறினார். (அ)

## 102 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜுலை. 30

இலங்கையில் 102 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள் பணிப் பாளர் அன்வர்ஹம்தானி இதனை தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த மருந்துகளின் விநியோகம் கடுமையான நிர்வாகத்தின் மூலம் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஓகஸ்ட் விடுமுறை இல்லை!

கொழும்பு, ஜுலை. 30

அரச பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எதிர்வரும் நவம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தவணை விடுமுறை வழங்கப்படாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நவம்பர் மாதம் இறுதிவரை தொடர்ச்சியாக பாடசாலை கல்வி நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாராளுமன்றக் குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிக்கு!

கொழும்பு, ஜுலை. 30

9 ஆவது பாராளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 03 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்துவைக்கப்படும்.

2 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு, சபைக் குழு உட்பட முக்கியமான 11 குழுக்கள் செயலிழந்துவிட்டன.

மேற்படி 11 குழுக்களில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு ( கோபா), அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்), அரசாங்க நிதி பற்றிய குழு என்பன முக்கியத்துவம்மிக்கவை.

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் இக்குழுக்களில் அங்கம் வகித்தாலும், தலைமைப்பதவியை தக்கவைத்துக்கொள்ள ஆளுங்கட்சியே முற்படும். நல்லாட்சியின்போது இந்நிலைமை மாறுபட்டது.

கோப் குழு தலைவராக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தியும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரனும் செயற்பட்டனர்.

மொட்டு ஆட்சியின்கீழ் கோப் குழுவுக்கு சரித ஹேரத், கோபா குழுவுக்கு திஸ்ஸ விதாரண, அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு அநுர பிரியதர்சன யாப்பா போன்ற மொட்டு கட்சி எம்.பிக்களே நியமிக்கப்பட்டனர்.

எனினும், புதிய கூட்டத்தொடர் ஆரம்பமானதும், மேற்படி முக்கிய மூன்று குழுக்களினதும் தலைமைப் பதவிகள் எதிரணி எம்.பிக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## சீனாவிடமிருந்து 4 பில்லியன் டொலர் பேச்சு மிக விரைவில் நிறைவடையும்

கொழும்பு, ஜுலை 30

சீனாவிடமிருந்து 4 பில்லியன் டொலர் கடனுதவிப் பொதியை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தை மிக விரைவில் நிறைவடையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹொன இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகள் மிக விரைவில் முடிவடைந்து சாதகமான முடிவு கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

இந்த கடன் உதவிப் பொதியின் மூலம், இலங்கைக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள 1.5 பில்லியன் டொலர் நிதி வசதியை செயற்படுத்துவதற்கும், 1.5 பில்லியன் டொலர் கடன் வசதியைப் பெறுவதற்கும் சீனா எதிர்பார்த்துள்ளது.

சீனா இலங்கைக்கு கடன் வழங்கும் முக்கிய நாடாக கருதப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 - 10 - 1933

மறைவு 25 - 07 - 2022

### திருமதி சொபியா சாமுவேல்

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பைக்குளம், சுவிஸ் Luzern ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சொபியா சாமுவேல் அவர்கள் 25.07.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமநாதன் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான Dr. ஹென்றி சாமுவேல் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சாமுவேல் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயவதி, ரேவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசலிங்கம், செல்டன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபா, மாருதன், எடிசன், எல்வீனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

நல்லடக்கம்
Friday, 29 Jul 2022 12:00 PM
Cemetery Friedental Lucerne Friedentalstrasse 60, 6004 Luzern, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Malcolm Shelton - மருமகன்.

தொடர்புகளுக்கு:
Malcolm Shelton - மருமகன்
Mobile : +41798602843

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 08 - 1943

மறைவு 28 - 07 - 2022

### தர்மசீலன் சிவயோகன் ராஜரட்ணம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். உடுவில், யாழ்ப்பாணம், கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப் பிடமாகவும் கொண்ட தர்மசீலன் சிவயோகன் ராஜரட்ணம் அவர்கள் 28.07.20222 வியாழக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் ராஜரட்ணம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், ஜேக்கப் சைமன் றெஜினா தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற அஞ்சலாறோஸ்மலர் அவர்களின் அன்புக் கணவரும், யூட் கிருபாகரன், பேர்னாட் சுபாகரன், மேரி றோஜினி, மேரி றோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தி, ஷோபனா, நொயல் றூபன், பாக்கிய றெஜினோல்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும்,யோகரத்தினம் பத்மநாதன், காலஞ்சென்றவர்களான யோகேந்திரன், யோகசீலன் (சீலன் Master) மற்றும் மகேஸ்வரன் (பூபாலன்), அருணகிரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் விமலேஸ்வரி, சகுந்தலா, நளாயினி, லூசியா ராயப்பு, மேரிமெக்டலின், காலஞ்சென்ற பசில் மற்றும் பீற்றர்போல், மெர்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜேடன், எவ்லின், அஷ்வின், டைலன், ஜெசிக்கா, அமிஷா. நிதிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 31 Jul 2022 5:00 PM - 9:00 PM
Monday, 01 Aug 2022 9:00 AM - 10:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

திருப்பலி
Monday, 01 Aug 2022 11:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

தகனம்
Monday, 01 Aug 2022 12:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பேர்னாட் சுபா - மகன்.

தொடர்புகளுக்கு:
யூட் கிருபா - மகன் Mobile : +14163053542
பேர்னாட் சுபா - மகன் Mobile : +16472910484
மேரி றோஜினி - மகள் Mobile : +19057824284
மேரி றோகினி - மகள் Mobile : +14164571221

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE-பிதாமகன்
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்
05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை

**இரவு**

07.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்-புத்தம் புதிய நிகழ்ச்சி



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்



09.00 மணி: டான் பட்டிமன்றம்
10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு